Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 11.—June 1902.

CONTENTS.


| | | PAGE. |
|---|---|---|
| Abolition of Vernaculars........ | Editors.................... | 401 |
| Nectar of Historic Curiosities... | C. Swaminatha Pillai........ | 403 |
| Vikramorvasiyam.................... | P. M. Srinivasacharyar...... | 411 |
| Kási Kandam......................... | Chidambaram Pillai....... .. | 419 |
| Female Education.................... | S. Audimulam Pillai......... | 422 |
| The Light of Truth of Tirukkovaiyar | Sri la Sri Sendinatha Aiyar.. | 429 |
| A Condolence........................ | V. G. Suryanarayana Sastriar, B.A.... | 436 |
| EDITORIAL NOTES........ ........................................ | | 438 |


Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1902.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

Annual Subscription including postage Rs.... 2 8 0

N.B.—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

The **Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதார்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க சமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடக வியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| இரண்டாம் பாகம் ... | 0 | 8 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை **ஆரியன் புக் டேபோவிலும், தாம்ஸன் கம்பெனியா**ரிடத்திலும், அகப்படும்.

# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. 1902ஆ ஜுன்மீ புத்தகம் 11.

விஷயங்கள்.

பக்கம்.

சுதேசபாஷைநீக்கம்.—பத்திராதிபர் ... 401
சரித்திர விநோதாமிர்தம்.—சி. சாமிநாத பிள்ளையவர்கள் ... 403
விக்கிரமோர்வசீயம்.—பு. மா. ஸ்ரீநிவாசா சாரியரவர்கள் ... 411
காசிகண்டம்.—சிதம்பரம் பிள்ளையவர்கள் ... 419
பெண்கல்வி—சு. ஆதிமூலம் பிள்ளையவர்கள் ... 422
திருக்கோவையாருண்மை விளக்கம்.—ஸ்ரீ காசிவாசி - ஸ்ரீலஸ்ரீ செந்திநாதையரவர்கள் ... 429
பரிந்துரை.—வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ. 436
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 438

பத்திராதிபர் :— எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை :
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

வருஷசந்தா ரூ. 2—8—0. சஞ்சிகை ரூ. 0—4—0.

ஞானபோதினி

சம்புடம் V. } 1902ஹூ ஜூன்மீ { புத்தகம் 11.

## ABOLITION OF VERNACULARS.

### சுதேச பாஷை நீக்கம்.

சென்ற சின்னுட்களாகச் சுதேச பாஷைகளாகிய தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னட மாதியவற்றை நஞ் சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளி னின்றும் நீக்கிவிடல்வேண்டு மென்றதோர் பேச்சு வெள்ளிடையி னுலவாநின்றது. அஃதெங்ஙனம் நிகழ்வதாயிற்று ?

நமது கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதி யவர்களது ஆணையின் வண்ணம் சர்வகலாசாலை விசாரணை சபையோர் நஞ்சென்னை யிராஜதானியிற் கற்பிக்கப்படும் கல்வியினேற்றத் தாழ்வுகளைப்பற்றி யாராய்வான் புக்கனர். புக்குழி அவரவர் தத்தம் அபிப்பிராயங்களை யெடுத்துரைத்தனர். அவ்வாறு அபிப்பிராய முரைத்தாருள் நம்முடைய சென்னை வித்தியாவிசாரணைத் தலைவரு மொருவர்.

இவர் "சுதேச பாஷைகள் கௌரவஞ்சான்றன வல்லவாதலானும், இவைவ்பிற்றைக் கீர்வாண கிரேக்க லத்தீன் பாஷைகளோ டொருங் கெண்ணுதல் வசையிழைத்தல் போலுதலானும், இவற்றின்கண் தூயநூற்றொகுதிகளும் லௌகிக விடய ஞானத்திற்கேற்ற நூற்றொகுதிகளு மின்மையானும், இவை காலத்திற் கேற்ப அமைந்து கொள்ள மாட்டாமையானும், பிராணதாரணப் பிரயத்தனத்தில் அழிந்து படற்பாலவாதலானும், பிறவாற்றானும் இவற்றைச் சர்வகலாசாலைப் பரீட்சைகட்குக் கற்றற் குரியனவா யமைத்தலின்றி அறவே ஒழித்துவிடல் வேண்டும்" என அந்தோ ! வாய்கூசாது தம் உட்கிடை உனரத்தார். என்னே இவர் தங்கருத்து ! எல்லாப் பாஷை

கட்கும் பெருந்துணைவராய் நின்று உதவவேண்டிய தலைவரே பேதுற்றுப் பிறிதுபடவுரைத்தா லென்செய்வது !

சுதேச பாஷைகளே இக்காலத்து ஈண்டைமக்கள் வழங்கிப் பேசும் பாஷைகளாய் விளங்குதலின் இவை காலத்திற் கேற்றகோலம் புனைந்துகொள்ள மாட்டாதன வென்றல் வெற்றுரையாமாதலானும், இவைகளே புதிய கருத்துக்களுள் ஏற்பனகொண்டு நீர் பிரித்தொதுக்கித் தீம்பாலுண்ணும் அன்னப்புட்கள் போலுதலானும், திருக்குறளாதிய தூயநூல்கள் பல முன்னரே யுண்மையானும், மேற்புல விஞ்ஞானிகளது கொள்கைகட்கியைய லௌகிக விடயஞான நூல்கள் பல சுதேசபாஷைகளில் நாளாவட்டத்தில் வெளிப்படுகின்றமையானும், ஏட்டு வழக்கொடு பேச்சுவழக்கு முடையனவா யொளிர்வனவற்றைப் பேச்சுவழக்கற் றேட்டுவழக்காய் மட்டில் நிற்பனவற்றோடொருங்குவைத் தெண்ணுதல் வசையிழைத்தலா மென்பது 'யானுமறியேன், அவளும் பொய் சொல்லா" ளென்ற கம்பர்கூற்றிற் கிலக்கியமாய் எம்முரையையே வலியுறுப்பதாய் அறைபோதலானும், மக்களைச் சீர்திருத்துவதற்குற்ற பெருங் கருவிகளாயிருப்பன அவரிடம் பயிலும் சுதேசபாஷைகளாமே யன்றி மற்று வழக்காறற்றொழிந்த ஏனையன வல்லவாமாதலானும், கௌரவஞ்சான்றனவற்றை அத்தகைய வல்லவென்றுரைத்தல் பெற்றதாயை மலடி யென்றுரைத்தலோ டொக்குமாதலானும், இதுகாறும் பிராணதாரணப் பிரயத்தனத்தில் வடமொழி யாதியபோ லழிந்துபடாது தக்கனதங்கன் முறைப்படி இவையனைத்தும் மிக்க பயன்பாடுடையனவாய் நிற்றலானும் பிறவாற்றானும் வித்தியா விசாரணைத்தலைவ ருரைத்தது போலி யென்றொதுக்கற்பாலதாமாறு தெற்றென விளங்கும்.

சுதேச பாஷைகளின் வன்மையும் ஊற்றமும் பழையனகழிந்து புதியன புகுந்து இயங்குமேம்பாடும், நாகரிக விருத்திக்கேற்ற இயல்வளமும் செப்பமுடைமையுங் கண்டு பல விடங்களினும் அவை முன்னுக்கு வருதலைப் பெரிதும் விரும்பி வாய்ப்பறை யறைந்து முழங்கிய இராஜப் பிரதிநிதி யவர்கள் நமது சென்னை வித்தியாவிசாரணைத் தலைவரொருவருடைய உரைகேட்டுச் சுதேச பாஷைகளின் நீக்கத்திற் கிடங்கொடா ரென்பது திண்ணம்.

பத்திராதிபர்.

# NECTAR OF HISTORIC CURIOSITIES.

# சரித்திர விநோதாமிர்தம்.

(221-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## நைடதகவிகளின் சில ஆட்சேப ஸமாதானங்கள்.

*** [நைடதம்பாடிய **அதிவீரராம பாண்டியர்** தம்நூலில் அவையடக்க முரைத்தாரில்லை யென்றும், அதிக தற்புகழ்ச்சி விருப்பினரென்றும், அவர் மீது பொறாமைகொண்ட சில புன்கவிகளும், நியாயமற்ற நியாயங்கொண்டு அவர்து நீதித்தானமேறி வழக்கிழந்த சில மூடசிகாமணிகளும், அவரைப்பற் றிப்பலவாறு தப்பபிப்பிராயமேனையோர் பெரிதுங்கொள்ளத் தூற்றிவிட்டனர். இது **நிரம்பவழகியார்** திருச்செவிக்கு மெட்டியதா லவருஞ்சற்றே யருவருத்த தன்மையே கொண்டுற்றிருந்தனர், அக்கால் இவ்வழகியார் நம் பாண்டியரிருப் புத் தானத்தைத் தற்செயலாய்ச் சமீபிக்க நேரிட்டும், அவரையணுக மனச்சம் மதமுறாது நணுகிய அயற்கிராம மொன்றிலிருந்து கொண்டு, தமக்குந் தம்மு டைய பரிவாரங்கட்கும் வேண்டிய செலவுக்கட்காகத் தாமந்நாள் காறும் பல வரசர் பிரபுக்களிடத்துப் பொருளாதிய பெற்றுவரும் வழக்கையநுசரித்துத் தங்கற்றுச் சொல்லிகளிற் சிறந்தானும் அமுதபாடணனிடம், நறுக்கிய நறுக் குத்துண்டொன்றில் ஒரு கவியை வரைந்தீந்து, அரசனிடத்துப் பொருள் பெ ற்று வருகவென வனுப்பவே,-சமத்தான வித்துவான்கள் புடைசூழ வீற்றிருந்த பாண்டிய ரிடஞ்சென்று அவனு மக்கவியைச் செலுத்தினன். அங்ஙனஞ் செ லுத்தவே, பாண்டியர் தஞ்சமுகம் **நிரம்பவழகியார்** வருதற் கருவருப்புற்றார் என்பதனைக் குறிப்பினுணர்ந்து, வந்தகவியைத் தாமே நேரிற்றங் கைம்மிசைப் பெற்று வாசித்திடு முளமின்றி, அருகிலிருந்தா னொருவனை வாசிக்குகவென ஏவ, அவனும் வாசித்தனன்.

வாசிப்பா ரோசை வேறுபாடா தியவற்றாற் பொருளொன்றும், அக்கர வரிசைக் கிரமத்தாற் பொருள் வேறுமாதலை வல்லார்வாய்க் கேட்டுணர்கின்றா மன்றோ? உட்பொருட் குறிப்பாய்,

"மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு
மெழுத்திய றிரியா வென்மனார் புலவர்"

எனத்திரண தூமாக்கினிப் பெயரிய பேராசிரியரும், "செய்யுளிடத் துச் சொற்பொருளன்றித் தொடர்பொருள் வேறுபட்டிசைத்தல்..." உள் வென உச்சிமேற் புலவர்கொள் **நச்சினார்க்கினியரும்,**

"எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
யிசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப."

" பொருளதி கார முன்ன முத்தி
வெளிப்படை குறிப்பே மெய்ப்பா டன்மொழி,
யொட்டாகு பெயரே யுவமை யிறைச்சி
யுபசார மாசை யுண்ம யக் காதியேது வாக வியம்புவர் சொற்பொருள்"

என வேனையாசிரியர்களு மிசைத்தனரன்றோ ? ஆதலின், " குன்றேறுமா" என்பது குன்றேறு - ஆமா - எனவும், குன்றேறு - மா - எனவும், குன்றேறு - ஆ - மா - எனவும், குன்று - ஏறு - ஆ - மா - எனவும், வினாவாகவும், வேறாகவும், " ஐயமிட்டார் கெட்டார்" என்பது, ஐயமிட்டு - ஆர் கெட்டார் - எனவும், ஐயமிட்டார் - கெட்டார் - எனவும், ஐயமிட்டார் கெட்டாரோ ? எனவும், * * * இன்னும் பலவும் பலபேதமாகச் சொல்லுவானது இசையறுத்துக் கூறும் வேறுபாடாதியவற்றாற் பொருட்பேதம் விச்சயிக்கலாவதுங் காண்க. அங்ஙனே, வாசித்தான் பொருட்பேத மறியாப் புன்மகனாதலின், ஒலி வேறுபாட்டாற் பொருள் பேதித்தபடி வாசித்ததனால், அழகியார் தஞ்சபைக்கு இன்ன காரணத்தால் எழுந்தருளாது கிட்டியுள்ளாரென முன்னரே சித்தம்வேறுபட்டுற்ற பாண்டியர், அக்கவிக்குச் சன்மானமே கொடுக்க விரைந்து, அதற்கு ஆயிரம் பொன்னென்ன மதித்து, வாசித்தானேற்பட்ட பிழைக்கு அதிலொரு பொன்குறைத்து கூகூகூ - பொன் மாத்திரமே கற்றுச் சொல்லிபாலளிக்க வர, உலக நடைவல்லானு நுண்ணறிவினனுமாகிய அவ்வமுத பாடணன், குறிப்பானிகழ்ந்த யாவுங்கிரகித்துத், தான் வேறு இடத்திற்குஞ் செல்வதாக வந்தமையான் ' அங்குச்சென்று திரும்புங்காற் பெற்றுச் செல்வேன்' எனத்தந்திரமாகக் கூறிப்போந்து நடந்தவனைத்தினையுந் தெற்றென வழகியாரிடத்தே தொகுப்ப, அக்கலாசாகரமெழுந்து, பல்லக்கி லாரோக்ணித்துக், கவரிகாவிருமருங்கு மசைப்ப, ஆலவட்ட மியங்கச், சயத்தொனி தழங்கப், பேரிகை யடிபட்டிடி யெனக் குமுறத், தமவிருதுகள் பலவு முற்செலச், சின்னமோதையா னவற்றினு முற்செலச் சென்று, அரண்மனை வாயிலினிழிந்து, அவ்விடத்தே யுபசார மரியாதையாக எதிர்கொண்டுவாராப் புவிச்சக்கரவர்த்தியை இக்கவிச்சக்கர வர்த்தியார் பங்கப்படுத்தி யடக்குவான், தமவாரவார வாடம்பரத்தோடு திடீரென் வவர்சபையுட்புக்கார். அப்பொழுதத்தே இவரது வேடப் பொலிவும் பெருமையாதிய மேம்பாடுகளும் அச்சபைக்கணுள்ளாரைத் தம்மறிவின்றியே யெழுந்து வந்தனம் புரியப்புரிய, அதுகண்ட பாண்டியர், " கல்வியின் பெருமையே பெருமை" எனவியந்து, அவையார் போலன்றித் தம்மறிவுடனேயே நின்று, நிரம்பவழகியார் மிகக்கறுத்த தடித்த திருமேனியுடைய இயற்கைக் கெதிரிய வச்சில வழகினராதலே அன்றே யத்ததியே கண்டுணர்ந்து, " இவர் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் ; இவரோ நிரம்பவழகியார் ?" எனத்தம்மை மிகவடுத்துள சிலருமரிதிற் றெரிய வறியாதபடி கிளந்தனர். ஒட்ட வியற்கைப் போக்கானும், வதனநிகழ்ந்த குறிப்பானும்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டுமுகம்."—எனவும்
"அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்"-எனவுங் கூறினபடியே, அதனை,
"கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி".

என்னு மிவ்விலக்கியத்துக்கு இலக்காகின்ற வழகியார் உணர்ந்தனர். இப் பாற் பாண்டியரும்,-கற்றுவல்ல நிபுணரும், சுருதிமிருதி தெளிந்து அவற்றைப் பலவிதப்பட இன்றியமையாதன வெடுத்துக்கொண்டு இனிய தண்டமிழ்ச் செய்யுளாச் செய்துள்ளா ராகையானும்,......தத்தம் வரிசையா னின்புறாஉ மேல்" என்றும் ஆன்றோர் வாக்கின் அரும்பொருட் கிலக்காகி, ஆழ்ந்து அடங்கி யொடுங்கிச் சமைகுடிகொண்ட வேந்தராகையானும்,

."இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று"

என்ற நாலடியாற் கலங்கித் தெளிந்து, அதிவிரைவிற் சுவாமிகட்குத் தக்க வந்தனுதிகள் தஞ்சபையோடுஞ் செய்து, சிறந்ததோ ராசனத்து மெழுந்தருள வுஞ்செய்து சேவித்து, ஒழுக்க நிகழ்ந்த வண்ணமே தாமு மேனையாரோடு மிருந்து, அடிகளோடும் வித்துவ சாம்பிரதாய மார்க்கமே அளவளாவி யுரை யாடா நிற்கையில், சுவாமிகள் பாண்டியரை நோக்கி "யாமனுப்பிய கவி சமுக மேறியதோ?" என, வேந்தர் "அக்கரச்சமுக வக்கவிவான நாடிக்கை கண் டது கண்டேன்" என்றாராக, இதற்கிடையில் உலகநடைவல்லானுய, சுவாமி களின் கற்றுச்சொல்லியும் முன்னர்த்தா னுரைத்தாங்குச்செல்வுழிச் சென்றெய் தியானுப்ப வித்துவ விராச சமுகங்களிரண்டையுந் தரிசித்து, அவண் தான் தற்கால் வருமுன்னிகழ்ந்தன அறிந்துவந்தானுகையின், தேசிகரைவணங்கிச் சுவாமிகாள், "சக்கிரி தந்தபொன்னுென் றறிஞயிரம்" என வேந்தரின் சாந்த சமயமறிந்து சாதுரியமாக வசனிக்க, அழகியாரும் "ஆகையி னதனைக்கொண் டேம்" என்றருளினர். இங்ஙனங் 'கைக்கொண்டேம்' என்றது கைக்கொண் டிலேம் எனத்தொனி யருத்தந்தந்து நாராசம்போற்பாய்ந்து பாண்டியரை யுணர் வுறுத்தியதால், அவர் திடுக்கிட்டுத் தொனிபேதத்தா னிகழுல்லங்கனத்தையும் அதுபற்றித் தம்மியற்கைச் சத்திரியத்தன்மையினெழுந்த சாத்திரத்தையும் ஒரு வாறுட்கொண்டடக்கி, மேலுந்தொனிக்கூறுபாட்டு வேற்றுப்பொருள் இருவரி டத்து முடனிகழ்ந்தமை போலுணர்வோட்டி நிதானித்தும் சுவாமிகளனுப்பிய பாசுரத்தைத் தஞ்செங் கோற்கரமேற் கொண்டேற்றுக்கூர்ந்தமதியோடாய்ந்து, வாசித்தானுற்பெறப்பட்ட பொருட்கு மறுதலைகண் டுள்ளே வெள்கி யாநங்

தித்தனர். ஆயினுமென்னே ! "ஓடியபுனல் பாய்ந்தே தீரும்" "ஓங்கியகை யறைந்தே தீரும்" "ஆடவிலறுமுஞ்ச லாடியே வீழும்." "ஓடலிற் கவந்த மோடியே சாயும்," என்பதுபோல் மானுஷீய் வியற்கையாக, அடக்கிய உல்லங் கன மேலீட்டுச் சாத்திரம் வெளிப்பட்டுத் தோன்ருது உள்ளே சற்றப்புகைந் தமையான்,—

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
ருெத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் பேசுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கூர்குறிஞ்சி பட்டினப்
பாலை படுகடாம் பத்து."

"நாலடி நான்மணி நானுற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்பவற்ருேடு இருவகைப் பஞ்சகாவியாதிகளினுந் தொல்காப்பியாதி களினும் பலவித ஆசங்கைகளை யேற்படுத்திக்கொண்டு, சாந்தமாகப் பேசுவார் போன்று வாததோரணையிலே நின்று வினய், இறைகளை யாட்சேபித்துக்கொ ண்டேவர, நிரம்பவழகியாரும் அங்ஙனே யானையோ டெதிர்த்த சிம்மமே போல், சிம்மத்தோ டெதிர்த்த யாளியேபோல், யாளியோடெதிர்த்த யானை யாளியேபோல், யானையோடெதிர்த்த சர்ப்பமேபோல், சர்ப்பத்தோடெதிர்த்த சார்த்தூலமேபோல் மேற்பட மேற்படத் தாமுமேற்பட நின்று, பற்பல வித மாக வித்தாரப்பட்ட இலக்கண விலக்கிய மேற்கோள்களைக் கீழே காட்டிய னவும், காட்டப்படாது அக்காலத்தே இறவாதுற்றனவும் ஆகிய நூல்களினி ன்று மெடுத்துக் காட்டிப் பாண்டியரைப் பங்கப்படுத்திய தன்றியே, அவர் பா டிய நைடதத்தும் ஆங்காங்குச் செய்யுட்களை யெடுத்துக்கொண்டு அது அந்த விரோதம், இது சந்தவிரோதம், உது தொந்த விரோதம், அவை அன்ன விரோதம் எனவுங்கூறி, இவற்றுள்ளும் பொரு ளிலக்கணத்திற்குப் பொருத்த மில்லனவே மிகுதிப்பட வெடுத்தோதி அந்தோ! அந்தோ !!

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்ற தமிழ்வேதி மோதாததான் உற்ற உலக நடை விருத்தம் இவை இவை ஆகுமன்ருே வெனவுங் காட்டிச் சென்றனராம். அவற்றுட் சில வரு மாறு :—

"வாய்ந்த மின்னை மடந்தைய ராக்கிவின்
போந்தி டாமலன் றேமலர்ப் புங்கவன்
சாந்த ணிந்த தமனியக் குன்றென
வேந்து வெம்முலைப் பார மியற்றினன்."

என்ற நைடத கவியை யெடுத்துக்கொண்டு, பாண்டியரே, மின்னலை மடந்தையராக்கியெனச், "சாயற்கு மின்னமுதந் தான்மயிலாம்..." "...வதியு மின்னார் தமைப் பேச..." "அம்பொற்றொடி யணிமின்னார்..." "...குயின் மோகினி தேன்பாகுகிள்ளை - தொடிமின் காமனபிடேகம்..."-என்றவற்றுட் பெரியர் கூறியாங்குக் கூறியதும், அது வானத்தை நாடுமியற்கைய தென்று காட்டியதும் வித்துவ தோரணைக் கமைந்த விசேட நுண்ணறிவின்பாற் படுமென்றாலும், அம்மின்னாகிய மகளிர் அவ்வாறு முகிலைநாடா திருத்தற் பொருட்டுப் பொற்குன்றாகு தனமான பாரத்தை மலர் மிசையோ னமைத்தானென்றது எவ்வாறு பொருந்தும்? சிறுமியராகிய வன்றே யமைத்தானெனில், அப்பேதை பெதும்பைப் பருவத்து நகிலம், பருத்துக் கிரியுவமையினில்லாது என்னுமதைப் "பேதைக்கு வெயிலினு ளனற்போன்றும், வித்தினுள் விருக்கம் போன்றுங் குயமென்ப தொன்றுண்டெனத் தெரிந்துந் தெரியா திருப்பதாம்" என்றும், "பெதும்பைக்கு மார்பினேயுற்ற தென்றபடியாச் சிற்றிலந்தைக் கனியே போல்வதாம்" என்றுங் கூறுவரன்றே? மங்கைக்குத் "தடத்தாமரை முகிலொத் திருப்பதுவே தனமாம்" என மேலே சொல்லுமாறுங் காண்க. வேறும்,

"தளம்பள மவ்வள வேபேதை யப்பெதும் பைத்தனந்தா
தளம்பள மவ்வள வேமங்கை மாமடந் தைத்தனமா
தளம்பள மவ்வள வேதெரி வைத்தனந் தானுறுசீ
தளம்பள மவ்வள வேதனம் பேரிளந் தையனுக்கே"

என்றுங் கூறியுள்ளாரே. ஆக இவ்வுவமானங்களையே பொறுத்திருப்பதானும், உலாப் பிரபந்தாதிகளுக்கும் மாறாகக்கூறிய மலையுவமை பிழைபடுகின்றதே யெனவும், 'மடந்தை' என்றதனன் அப்பருவப் பெண்ணெனின், மலர்ப்புங்கவன் அப்பருவப் பெண்ணாகவே பிரதமத்திற் படைத்திலன்; ஆகையான் அதுவும் பிழைபாடாமெனவும், அதனைச் சாமானியமாய்ப் பெண்ணெனவே கொள் எனின், அதுவுஞ் சிருட்டிப்பின்பா லேறிக் கீழே விளக்கினபடி குழவிப் பருவமாமே யன்றி வேறு என்று ஆவது முண்டோ? என்றுங் கூறி நிற்பவே,-

அப்போது பாண்டியர் இவ்வனைத்து மென்னே? "இருவகைப் பொருளையுந் தேட விரும்புவோர், நித்திரை - சோர்வு, பயம்-கோபம் - ஆலசியம் - இழுக்கம்-என்னு மறுவகைக் குற்றமு மிலராயின் அவர்க்கவை சாத்தியமாம்."-என்றதினின்றும் வழுவினன் பாசுரம்படித்த பண்பானன்றே இவையாவு

நிகழ்வவாயின; அன்றியே நாந்தாமும் "ஆயிரம் நல்ல குணத்தையும் ஒரு லோபகுணம் அழிக்கும்" என்பதையு முள்ளினே மன்று.

"சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ றரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னொக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்."

"தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்று லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானைச் சம்போ லறு."

"கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றியாதான் வாழ்க்கை—யரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வாரே
எற்றேமற் றெற்றேமற் றெற்று."

"நம்ப னடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளார்க்காந் தீக்காகுங் காண்."

என்ற உலகமாதாவின் வாக்கைக்கவனியாது,

"சுரதந் தனிவிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிவிளைத்த மேனி—விரதங்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

என்றதா லவர் தெளிவித்த அழகினையடையாது அந்தக் கேடாகி,

"...என்றும்—இன்சொல் எண்பதத்தை ஆதிபெரும்..."
என்ற **ஆவூர் மூலங்கிழார்** புத்தியிலடங்காது.

"போந்த வுதாரனுக்குப் பொன் துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறு துரும்பு - வாய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பு..."

என்றபடி நாளதுகாறும் உதாரர்களென்று பெயர் பெற்று வந்த சந்திர குலத்தரசர் தம்பேருக்கு மோரிழிவை யேற்படுத்தி, ஈரரைப் பொன்னுக்கு யாம் பால்மாறியதும், அரசர்க் 'கியற்கையாஞ் செருக்கிற் கிடந்ததுமன்றோ இங்ஙனம் பிரமாதமாக்கியது? எனச் சிந்தித்தவண்ணமே தமது சமத்தான வித்துவான்களாகிய கவிக் குஞ்சரங்களைக் கடைக்கணித்தார். அப்போது அவருள் நயவாக்கி யென்பானொருவன் சுவாமிகளை நோக்கி,- ஓ குருசுவாமிகாள்,

"துறவிக்கு வேந்தன் றுரும்பு"-என்றும்,

"பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்"-என்றும்,

ஆன்றோர் கூறிய தறிந்தனமன்றோ? அஃது அற்றாக,

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து"—என்றும்,

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்"—என்றும்,

"கோவம் பாவஞ் சண்டாளம்"—என்றும்,

"யாவரே யெனினுங் கோவத் திகழ்ந்திடப் பொறுத்தோர் வைதோர்
மேவிய தருமம் யாவுங் கவர்ந்துதம் மீதிற் பாவ
மோவுற வவனுக் கீவா ரொருவன்செய் பாவந் தன்னை
நாவினு லுரைக்க லாகா கொடியன நவில லாகா"

என்றுங் கூறியவர் ஆன்றோரே யன்றோ? அன்றியும், "பிதாவாகிய **சத்திமுனிவரை விசுவாமித்திரரா** லேவப்பட்ட இராக்கதன் பட்சித்து விட்ட போது, அதர்வணவேத சம்பந்த வவிசார வேள்வியொன்றியற்றி, அவ்வழியே இராக்கதர்களை யெல்லாஞ் சாம்பர் செய்துகொண்டு கோவத்தோடுற்ற **பராசரரை,** அவர் பிதாமகனுர் அச்செய்கையை விட்டுவிடச் சொன்னதோடு, "கோவம் ஞானிகளல்லாருக்கே யுரியது" என்றதும், "கோவம்பொறாமை, அகங்காரம் பிடிவாதமாகிய இவைகளற்று நடுவு நிலைமை சாந்தமுதலிய குணமுடையவர்களே சிட்டராவார்" என்றதும், **போதாயனுதியர்** கூற்றேயாகும்; இப்பால்,

"அரசன் முடியாவதை முடிப்பேன் எனல் ஆகாது" எனலும், "வரிசையாதிய அரசு செய்திலனென வெறுப்பும், அவற்றைச் செய்யின் பூரித்து மகிழ்ந்து அவசமாகலும் ஆகா" எனலும்,

"அரசன்வரு நன்மை தீமையாமிரண்டும், சமானமென்றுன்னிச் சஞ்சலமற்றோரே யாவுமுணர்ந்தோர்" எனலும்,

"எதனையு நாவடக்கமின்றி அரசு முன்னிலையிற் பதறி யிகழ்த்தலாகாது;" எனலும், * * * * ஆகிய இவ்வனைத்தும், மாவிருடி **தௌமியர்** உபதேசமென்று மறிந்தனமே, எனக்கூறிக் குறிப்புணர்த்திப்பின்னுஞ்சில மொழிவான் யத்தனித்தனன்.

அக்காலை, பாண்டியரும் ஞான நூலறிந்த நல்லரசாகையின், தங்கரணப் போக்கையோர்ந்து, "மனமான செயல் வினைக்கும் சத்தி விசாரிக்கு மகங்காரங் கொண்டெழுப்புஞ் சித்தமொன்றுவிக்கும்..." என்ற நிலையினை, அவற்றிற்கு மேவாதின் றோர்ந்தாய்ந்து கொண்டு, அடிகளுஞ் சித்தவிகாரமின்றி

யாவுந் தெரிந்தே வசனிப்பதுந் தெளிந்தவராய், அவரைக் கொண்டே யாவற்றிற்குஞ் சமாதான மொழிவிப்பானுளத்திற் கொண்டு, பின்னுமவர் சொற்றவாங்கே வெறும் ஆட்சேபங் கூறல் வேண்டுமென விரும்பி, நயவாக்கியைக் குறிப்பிப்பான் வாளாவிருக்கப் பணித்து, அழகியாரை மகிழ்ந்து நோக்கியபடி, 'சுவாமிகாள்!' என்றனர். உடனே அவரும் அவ்வறிவை ஆடியிற் கண்டாங்கு தெளிந்து, ஏனையோர்க்கு அவமதித்துக் கூறல் போன்றே தோன்ற, ஒய் பாண்டியரே,

"கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி
யிருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
வுருவ வோடரித் தடங்கணு ளுருக்கொடு மீண்ட"

என்றநுங் கவிசிலைத்துறையா மூந்து கவியில்,

"வகையுளி சேர்தல் வனப்பின்றாய் விற்றல்
தொகையார் பொருள்பலவாத் தோன்றல்—தகையில்
பொருளின்மை யீறு திரிதலே போல்வ
தருமுதற்சீர்ச் சொற்காகுந் தப்பு"

என்ற பாட்டிற் கூறிய "தொகையார் பொருள்பலவாய்த் தோன்றல்" என்னுங் குற்றமேற வைத்ததென்னை? "கருவி தொகுதி" என்று திரணதூமாக்கினிமுனிவர் கூறிய சூத்திரத்திற்கு வடநூற் கடலையு விலைகண்டுணர்ந்த சேனாவரையர் 'கருவிவானம்' எனக்காட் டெடுத்தோதி, அக்கருவி மின்னுமுழக்கு முதலாயவற்றது தொகுதியென்றார். நீரே நேரிற் கைக்கொண்டு அபகரித்துப் போற்றிய சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்துற்ற,—

"கருவி மாமழை கனபெயல் பொழிந்தென வழிநா
ளருவி போற்றொடர்ந் தறாதன வரும்பிணி யழலுட்
கருவிற் காய்த்திய கட்டளைப் படிமையிற் பிழையா
துருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே"

எனக்கூறிய அதுவும், முறையே நாமகளிலம்பகத்தும், காந்தருவதத்தையாரிலம்பகத்தும் "கவ்வையங் கருவி சூழ்ந்து கண்படுக்கு மாடமும்" "கருவி வானங்கான்ற புயலின்" எனக்கூறிய அவையும், மணிமேகலையின் உலகவறவிபுக்க காதையிலுற்ற,

"வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்ன"

எனக்கூறிய அதுவும், அக்கருத்தினையே கரதலாமலகமாய் விளக்குகின்றதான், மிகப் பொருத்தமுறக் கண்டபடியே, மின்னுமுழக்கு மிடியும் வில்லாதியு முற்றவும்: "மாமழை" என்றதான் அவையுறக் கருமை வாய்ந்தவுமாகிய முகிலெனப் பொருட்சிறப்புத் தொடர்ந்து செல்லுகின்றமையான்

அங்ஙனமே கொண்டு பொருத்தலாம் வகைவையாது, உலகமலைவாமாறு கொளக்கூறலாப் பின்னர் அவற்றைக் "கலைமகளுருவென" என்றதும், "பரவை வெண்டிரை மேய்ந்து" என்றதும், "பனிவரையுயிர்த்த வுருவவோ டரித்தடங்கணு ளுருக்கொடு மீண்ட" என்றதும் என்னை? அவை யெங்ஙனம் பார்க்கினும் பொருத்தமிலவே! எனவும்; நல்லது பெரியோர் கொண்ட வுயர்ந்தவப் பொருளைக் கொள்ளாது,—உலகத்துக்குத் துணைக்காரணம், ஆகியவெனக் கோடலுமா மொன்றுளதேனும், அஃதும் அம்மட்டினையில்லாது "கரு-விமா-மழை" என்றபடியிற் கருவினுல் விம்முதல் இல்லாமழை யெனவுங் கொள்ளக் கிடத்தலின், அமங்கலமாய் மலட்டு முகிலெனவும் போதருமன்றே? ஆகவே, சூற்கொள்ளாதன வாயவவை பின்னர், அதன் மேற்கவியிற் கூறியாங்குப் "பொன்னங் குன்றின்மேலவன் கொடைபோன் மெனப் பொழிந்த" என்றது எங்ஙனே அமைதலாம்? அன்றியும், "கருவி மாமழை" என்னுமஃது,-கரு=கரிய, வி=நல்ல, மா=பெரிய, மழை=மேகம், எனவும்,—கரு=பெரிய, விமா=இலக்குமீகரமற்ற...எனவுங் குறித்திட்ட படி முதற்கட் பல்பொருண் மேற்றாயிற்றே! அச்சோ! குறித்த தொல்காப்பியச் சூத்திரக்கிடையிற் படுத்த விடமின்றி நின்றதூஉம், அதனுன் மலட்டு மேக மென்றாயதூஉ மெல்லாம் நினைக்குந்தோறும் நகை விளைப்பதோடு அம்மலட்டு முகில் சூற்கொண்டது எனில்,

"மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
யிலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரதம் விலைபேசிக்
கலகமாய் முயற்கொம்பினுற் குத்தியே தளைத்திருவரு மாண்டார்
அலகை யாயினர்..."—என்பது போலவும், (இன்னும் வரும்.)

சி. சாமிநாதபிள்ளை.

---

## VIKRAMORVASIYAM.

## விக்கிரமோர்வசீயம்.

(374-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---

**சித்திரலேகை:**—இல்லை யெனக்கு வல்லமை வாக்கால் துதிக்கைக்கு. இதனையோ சிந்திக்கின்றேன், 'நான் புரூரவனுக ஆகக்கடவேனு' என்று.

**உருப்பசி:**—சகி! மன்மதனன்றோ உன்னை ஏவுகின்றான். என்னை விரைவா யடைவிப்பி, அக்காதலரினிருப்பிடத்தை.

**சித்திரலேகை:**—(பார்த்து) அடி! நிலாப்பெருக்கினுல், பிரதிபிம்பங் கொண்டுள்ள கைலாச சிகரத்துக்குநிகரான உனது காதலரின் இம்மாளிகையை யடைந்தவர்களாகின்றோம்.

**உருப்பசி:**—அப்படியானுல் மேன்மையினுலறிவாய், 'அந்த என் மனக்கள்வர்

எங்கே என்னதான் செய்துகொண் டிருக்கிருர், என்று.

**சித்திரலேகை:**—(நியமனிர்த்துச் சிரித்துத்தன்றுள்.) இருக்கட்டும் ; விளையாடுவேன் காண் இவளோடு. (விளக்கம்) இவர் மனேரத்தா லடையப்பட்டுள்ள காதலியின் சேர்க்கைச்சுகத்தை யனுபவிக்க அனுபவித்தற்குத்தக்க இடத்திலே தோழனே டிருக்கின்றார்.

**உருப்பசி:**—அந்தச்சனமன்றோ பேறுபெற்றது, எது இப்படி யாகின்றதோ.

(உருப்பசி, தபரத்தை அபிநயிக்கின்றுள்.)

**சித்திரலேகை:**—பேதாய்! காதலியின் சேர்க்கைச்சிந்தைக்கு உன்னைத் தவிர வேறு யாவள் ?

**உருப்பசி:**—ஐயமுறுகின்றது வல்லமையற்ற எனது மனம்.

**சித்திரலேகை:**—(பார்த்த) இந்த அரசமுனிவர், தோழன் மாத்திரத் துணைவராய் மணியரமியத்தினர் ; வா, இவரைக்கிட்டுவோம்.

(இருவரும் இறங்குகின்றனர்.)

**அரசன்:**—தோழ ! இரவோடுகூடி வளர்கின்றது மதனபாதை.

**உருப்பசி:**—வெளிப்படாப்பொருளுள்ள இவ்வசனத்தினல் நடுக்கமுற்றேன். மறைந்தவர்களாய்க் கேட்போம் இவரது பேச்சை, எதனுல் நமக்கு ஐயநீக்கம் உண்டாகின்றதோ.

**சித்திரலேகை:**—எது நினக்கு இனிக்கின்றதோ.

**விதூடகன்:**—அமுதத்தினை யிடைக்கொண்ட சந்திர கிரணங்கள் அனுபவிக்கப்படட்டும்.

**அரசன்:**—இப்படிப்பட்டவைகளினற் போக்க முடியாது இக்காமச்சுரம் டார்.

புதியமல ரணையெனது பூங்கணையோன் புரிநோயைப் போக்க வற்றோ
மதிகதிரு முடன்முழுது மன்னியசெஞ் சாந்துமணிப் புவியு மன்ன
மதிப்புறுபொன் னுலகிலுள மாதவளோ வென்னேயை மாற்ற வல்லள்

**உருப்பசி:**—அகோ ! யாவள் தான் மற்றையவள் ?

**அரசன்:**—கொதிப்பகல வெளிதாக்கு மறையிடத்துக் கொண்டவவள் கதை
[தானே கொல். (51)

**உருப்பசி:**—நெஞ்சமே ! இப்பொழுது என்னைவிட்டுஇவரிடத்துப் பற்றிய உன்னுற் பயன் அடையப்பட்டது.

**விதூடகன்:**—ஓய் ! எப்பொழுது நான் திராட்சையின் ரஸத்தை அடைகின்றிலனே, அவற்றிற வேண்டினவனுய்ச் சிந்தித்துக்கொண்டு ஆற்றிக்கொள்கின்றனனன்றோ.

**அரசன்:**—உனக்கோ கிடைக்கும்.

விதூடகன்:—நீயும் அவளைச் சீக்கிரம் அடைகுவாய்.

அரசன்:—தோழ! இவ்வாறு நினைக்கின்றேன்.

சித்திரலேகை:—கேள், களிப்பற்றவளே!

விதூடகன்:—எப்படியோ?

அரசன்:—

இந்தப் புயமிரதத் தின்னசைவி னுலவடன்
சந்தத்தோ ளோடு தகைந்ததால்—இந்தமெய்யில்
ஒன்றுபயன் பெற்ற தொழிந்த வுறுப்புகளோ
ஒன்று தறைப் பொறையா மோர். (52)

உருப்பசி:—(சீக்கிரமருகிற்சென்று)

சித்திரலேகை:—என் காலக்கழிவு செய்யப் படுகின்றது? தோழி! மகாராசர், எதிரிலிருந்தாலு மென்னிடத்தில் உதாசீனர்போல்

சித்திரலேகை:—மிக்க விரைவினேய்! நீக்கிக்கொள்ளாத திரக்கரிணியையுடையவளா யிரு.

(திரைக்குள்,) இதோ! இதோ! தலைவி.

(எல்லோரும் கேட்கின்றனர், தோழியோடு உருப்பசி தபராப்படுகிறாள்.)

விதூடகன்:—அவித! அவித! ஓ! நண்ப! வந்துவிட்டனள் தேவி. நீ பேசாவிரதத்தினனு யிரு.

அரசன்:—நீயும் மறைக்கப்பட்ட வாகாரத்தினனுயிரு.

உருப்பசி:—தோழி! செய்யத்தக்கதென்?

சித்திரலேகை:—சாலும் விரைவினல்; மறைக்கப்பட்டவர்களாயே யிருக்கின்றோம். அரச முனிவரின் தேவியிவள் உபவாசத்தால் வாடிய இவளும் நியமத்துடன் கூடியவள்போலக் காணப்படுகின்றனள்; நில்லாளிவள் வெகு நாழிகை.

பிறகு புகுகின்றனள் உபஹாரத்தைப் பயனாகக்கொண்ட பொருள்களைத்தரித்த கைகினராய பரிசனர்களுடன் தேவி.

தோழத்தை:—இதோ! இதோ! தலைவி!

தேவி:—(சந்திரனைக்கண்டு) அடி! நிபுணிகை! இன்று உரோகிணியின் சேர்க்கையால் மிகவும் விளங்குகின்றனன் கடவுட்சந்திரன்.

தோழத்தை:—அடீஇ! அரசியுடன் கூடிய அரசருக்கு மிக்க வினிமை உண்டாகின்றது.

(எல்லோரும் உலவுகின்றனர்.)

விதூடகன்:—ஓய்! அறிகின்றிலேன், சுவத்திவாசனஞ்செய்யப்பட்டதா, இல்லையா வென்று. உன்னைவிட்டு நோன்பு வினைவியாசத்தால் விட்ட கோபத்

தின ளென்றெண்ணுகிறேன். இப்போழ் தென்கண்ணுக்கு இனிய தோற் றத்தினள் தேவி.

**அரசன்.**—(புன்சிரிப்போடு) இருவகையாகவும் ஆகின்றது ; ஆயினும், அங்கிவள்

வெள்ளை யாடையினண் மங்க லத்தளவ
தாக மேயவணி கலத்தினள்
அள்ளு தூயமுளை யறுகு தன்னினடை
யாள மேய்ந்தவள கத்தினள்
கொள்ளு நல்விரத வியாசங் கொண்டுவிடப்
பட்ட கோணலுறு செய்கைவாய்ந்
துள்ள தாமுடலி னென்றன் மீதுதெளி
வுடையள் போலத்தோற் றிடுமேரோ. (53)

**தேவி:**—(கிட்டி.) வெற்றி பெறுக, பெரியோர்மகர்.

**பரிசனம்:**—வெற்றி பெறுக, தலைவர்.

**விதூடகன்:**—மங்கள முனக்கு வளர்ச்சி பெருக தேவி !

**அரசன்:**—தேவிக்கு நல்லவரவா ?

(கைகளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கின்றான்.)

**உருப்பசி:**—தோழி ! இவள், தேவி என்னுஞ் சொல்லால் உபசரிக்கப்படுகின் றாளென்பது தக்கதே ! அச்சொற்குக் குறைந்தவளல்லள்.

**சித்திரலேகை:**—நன்று பொறாமையின்றிச் சொல்லப்பட்ட மொழி.

**தேவி:**—பெரியோர்மகரை முன்னிட்டுக்கொண்டு ஒரு சிறந்தநோன்பு என் னால் நோற்கத்தக்கது ; ஆகையால் முகூர்த்தவரை பிரதிபந்தம் பொறுக் கத்தக்கது

**அரசன்:**— அருளன்றோ ; இப்பிரதிபந்தம்.

**விதூடகன்:**—இப்படிப்பட்ட எங்களது சுவத்திவாசன நிமித்தம் உபரோதமே வெகுவாக உண்டாகட்டும்.

**அரசன்:**—தேவியின் இந்நோன்பு என்ன பெயருடையது ?

(தேவி, நிபுணிகையைப் பார்க்கிறாள்.)

**தோழத்தை:**—தலைவரே ! 'காதலரருளுண்டாக்குவது' என்னும் பெயரு டையது.

**அரசன்:**—(தேவியைப் பார்த்து) இப்படியாயின்,

இந்த நோன்பினுன் மங்க ளத்தினு
யேது வின்றுதா மரையி னுளநேர்
சுந்த ரத்துடல் வாட்டு கின்றனே
துன்னு காதலார் தாச னுகிய
எந்த மானிட னின்ன தாகிய
வின்ன ருட்டனே வேண்டு கின்றனன்
அந்த மானிட னடிமை யோனேநீ
யருள்க வென்றுவேண் டுவது மென்னையே. (54)

**உருப்பசி:**—இவளிடத்தில் மதிப்பு.

**சித்திரலேகை :**—பேதாய் ! மற்றையோரிடத்துற்ற வாசையினராய் மிகவுஞ் சமமான தொழிலின ராகின்றனர்.

**தேவி:**—(புன்சிரிப்போடு) இந்த நோன்பை மேற்கொண்டதற்கு இந்த மகிமை; ஏதனுல், அடி ! இவ்வளவு பெரியோர்மகர் பேசுவிக்கப்பட்டனர்.

**விதூடகன்:**—நீ மௌனங் கொள்வாயாக ; நினக்குத் தக்கதன்று நல்லொழுக்கத்திற்கு இடையூறு புரிதல்.

**தேவி:**—சிறு பெண்காள் ! பூஜாத்திரவியங்களைக் கொண்டுவாருங்கள், அரமியத்தை யடைந்துள்ள சந்திரகிரணங்களை அர்ச்சித்தற்கு.

**பரிசனம்:**—இது, சாந்துமாலை முதலிய பூஜா திரவியம்.

**தேவி:**—(நாட்டியத்தால் பூசித்து?) அடி ! தொழுத்தை ! இந்த பேஹாரத்தைப் பயனுக்கொண்ட மோதகத்தை ஆன்றேன் பிரமசாரியையும் கஞ்சுகியையுமடைவிப்பி.

**பரிசனம்:**—எது தேவி ஆஞ்ஞாபிக்கின்றனளோ என்று சொன்னவண்ணஞ் செய்கிருள்.

**விதூடகன்** —(மோதக பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு) மங்கள முனக்கு ; எண்ணிறந்த பலத்தினதாகுக உனது நோன்பு.

**தேவி:**—பெரியோர் மகரே ! இங்கே.

**அரசன்:**—இதோ வந்தேன்.

**தேவி:**—(கைகூப்பிக்கொண்டு சேவித்து) இந்த யான் தேவதா சந்திரன் உரோகிணி ஆகிய இவர்களை மிதுனமாகிய சாக்ஷியாக்கிப் பெரியோர் மகரை அருள் செய வேண்டுகின்றேன், பெரியோர் மகர் எந்த மடந்தையைப் பிரார்த்திக்கின்ருரோ, எவள் பெரியோர் மகரோடு சேர்க்கைக் காதலியோ, அவளிடத்தும் என்னிடத்தும் ஒத்த ஆசாபந்தத்தோடு இருக்கவேண்டும்.

உருப்பசி:—தோழி! அகோ அறிகின்றிலேன் எப்பொருளினதிவண் மொழி யென்று ; என்மனமோ மிக நம்பிக்கையற்றது.

சித்திரலேகை:—சிறந்த மேன்மையுடையளான பதிவிரதையினால் அநுமதி செய்யப் பெற்றவளாகின்றாய் நினக்குக் காதலரின்சேர்க்கை இடையூ றற்றதாகும்.

விதூடகன்:—(திரும்பி மெல்ல) தோழ! மீன் கைதவறி யோடினபொழுது துயர முற்ற வலைஞன் 'எனக்கு அறம் உண்டாகும்' என்று.

(விளக்கம்) ஆன்றோய் அளிக்கப்பட்டானா உன்னாலங்கவன்?

தேவி:—அறிவிலோய்! நானே எனது விரதமென்ற வியாஜயத்தினாற் பெரி யோர் மகரைச் சுகசரீரத்தினராகச் செய்ய விரும்புகின்றேன்; இவ் வளவு சிந்திக்கப்பட்டது, "பிரியரா அல்லரா?" என்று.

அரசன்:—

அன்னியனுக் கென்னை யடியேனை விற்றற்கும்
இன்னவா வாங்கற்கு மேற்றவணீ—என்னையே
எங்ஙன மஞ்சுகின்றாயே யச்சங் கொண்டவளே
அங்ஙன நானல்லே னால். (55)

தேவி:—நீர் ஆகின்றீரோ? ஆகின்றிலீரோ; 'காதலரரு ளுண்டாக்கு வது' என்னும் பெயரையுடைய விரதம், எண்ணியபடி என்னாற் செய்து முடிக்கப்பட்டது; வாருங்கள் பாலிகைகளே! போவோம்.

அரசன்:—(ஆடையினது நுனியைப் பிடித்துக்கொண்டு) விட்டு இப்போழ்து நீங்கின், அரு ளப்பட்டவ னாகின்றிலேன்.

தேவி:—பெரியோர் மகரே! என்னால் முன் தாண்டப்பட்டில தன்றோ நிய மம்.

[என்று பரிவாரத்துடன் அகன்றாள்.]

உருப்பசி:—நாயகிபாற் காதலினர் அரசமுனிவர்; ஆயினும் மனத்தைத் திருப் பிக்கொள்ள வலியற்றவளா யிருக்கின்றேன்.

சித்திரலேகை:—நீ நிராசையால் ஏன் திரும்புகின்றாய்?

அரசன்:—(ஆசனத்தை யடைந்து) தோழ! சேய்மையன்மையினளா? தேவி.

விதூடகன்:—எதைச் சொல்ல விரும்பினவ னாகின்றாய், அதை நம்பிக்கை யுடன் சொல்; வைத்தியனால் சிகிச்சைசெய்ய அசாத்தியனென்று விடப் பட்ட நோயாளிபோல், அங்கவளால் நீ இச்சைப்படி விடப்பட்டாய்.

அரசன்:—உருப்பசியினாலா?

உருப்பசி:—இப்பொழுது பேறுபெற்றவ ளாகின்றேன்.

விதூடகன்:—இவள் யாவள்தான்?

அரசன் :—

மறைந்தவளாய்க் காதலியென் காதின் கண்ணே
    மன்னுசிலம் பொலியினையே வீழ்த்து வாள்கொல்
நறைமலர்த்தா மரைக்கையாற் பின்னர் மெல்ல
    நண்ணிநய னங்கடமைப் புதைப்பாள் கொல்லோ
தறையிடையிவ் வரமியத்தி லிறங்கி வந்து
    தானச்ச முடைமையினுற் றளர்வுற் றேளாய்க்
குறைவிறிறத் தோழியினுல் வலிய மெல்லக்
    கொண்டுவிடப் படுவாள்கொ லென்சமீபம். (56)

உருப்பசி :—தோழி! இவரது இம்மனோரதத்தை முடிப்பேன்.

(என்று பின்புறத்தில் வந்து காணுத வுருவத்தினளாய் அரசன் கண்களை மூடுகின்றுள்; சித்திரலேகை விதூடகற்குக் குறிப்பிக்கின்றுள்.)

அரசன் :—(ஸ்பரிசத்தை அபிநயித்து) அந்த இனியகவானுடைய இவள், நாராயணன் றெடையிலுதித்தவள்.

விதூடகன் :—நீ எப்படி யறிகின்றுய்?

அரசன் :—இங்கு அறியத்தகாதது என்ன ?

வேளினுற் றன்புறுமென் மேனியினை மற்றெருத்தி
கோளில் கரந்தீண்டிக் கொள்வித் திடாளின்பம்
ஆம்பன் மதிகதிரா லன்றி வெயில்கதிரால்
கூம்பவிழ்ந்து வில்லாது கூர்ந்து. (57)

(உருப்பசிகைகளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கின்றுன்.)

உருப்பசி :—வெற்றிபெறுக மகாராசர்.

சித்திரலேகை :—சுகமா இனிய நண்பர்க்கு?

அரசன் :—இப்போ தடையப்பட்டது.

உருப்பசி :—தேவியாற் றொடுக்கப்பட்டார் மகாராசர்; ஆகையால் இவர் சரீரத்தை யடைந்தேன்; என்னை முற்செல்பவளாக நினையேல் காண்.

விதூடகன் :—உங்களுக்கு இங்கேயே எவ்வாறு சூரியன் அத்தமித்தனன்?

அரசன் :—(உருப்பசியைப்பார்த்து,)

நான்கொடுக்கப் பட்டேனென் னுயகியா லென்றிம்மெய்ம்
மேன்மன் வினைபுரிய மேவுதியே லென்மனத்தை
ஏவரது கட்டளையா லெய்திமுனங் கள்வியாய்
நீவந் தபகரித்தாய் நேர்ந்து. (58)

சித்திரலேகை :—தோழ! விடையற்றவளிவள்; இப்போழ்து என் விண்ணப்பம் கேட்கப்படட்டும்.

**அரசன் :**—கருத்தாயிருக்கின்றேன்.

**சித்திரலேகை :**—இளவேனிலின் பின்னராகிய முதுவேனிலிற் கடவுட்சூரியன் என்னுல் உபாசிக்கத்தக்கவன்; ஆதலால் என் தோழியாகிய இவள், எங்ஙனம் துறக்கத்தை ஆசையுருளோ, அங்ஙனம் தோழராற் செய்யத் தக்கது.

**விதூடகன்:**—ஆன்ரேய்! துறக்கத்தில் என்னதான் விணக்கத்தக்கது? அருந்துதலில்லே, பருகுதலில்லே; இமையாதனவாய கண்களினுல் மீன் அநுகரிக்கப் படுகின்றது.

**அரசன் :**—

சொல்லற் கரிய சுகத்தினதே யாந்துறக்கம்
வல்லனெவ னஃதை மறப்பிப்பான் மாதரார்
பல்லோர்கட் கும்பொதுவில் பான்மைப் புரூரவனே
நல்லிவட்குத் தாசனு நன்கு. (59)

**சித்திரலேகை :**—அருளப்பட்டவ ளாகின்றேன்; தோழி! உருப்பசி! அச்சமற்றவளாய் என்னே விட்டிடு.

**உருப்பசி:**—(சித்திரலேகையைக் கட்டிக்கொண்டு) தோழி! என்னே மறவாதிருப்பாயாக.

**சித்திரலேகை :**—நண்பரோடு சேர்ந்துள்ள நீயே என்னுல் இவ்வாறு சொல்லத் தக்கவள்.

[என்று அரசனேப்பணிந்து அகன்றனள்.]

**விதூடகன் :**—நீ மனோரத விறைவினல் தெய்வாதீனம் வளர்கின்றீனோ?

**அரசன் :**—எனது இது விறைவு; காண்.

எங்ஙனநா னின்றிவள்கா லேவல் வினைசெய்து
பொங்குபெரும் பேறுமிகப் பூண்டவனு கின்றனனே
காவலர்க டம்முடியின் கண்மணிகள் பட்டுமிறம்
மேவியகாற் சிங்கவணை மீதொற்றை வெண்குடைக்கீழ்
மண்காக்கு நல்லிறைமை மன்னியங்ங னம்பேறு
நண்ணினவ னுகேனே நான். (60)

**உருப்பசி :**—எனக்கு வாக்குவல்லமையில்லே, அதனினும் இனியது கூறுதற்கு.

**அரசன் :**—(உருப்பசியைக் கையாற் பிடித்துக்கொண்டு) அகோ! இச்சைப்பொருட்பேறு என்பது, மாற்றுப் பொருளேப்பெறுதல்.

சந்திரனக் கிரணங்க டாமேயென் னுடலுக்குத் தருமா வின்பம்
அந்தமத னன்றரித்த வம்புகளே யென்னெஞ்சுக் கனுகூ லங்கள்
சுந்தரிசம் ரம்பத்தாற் பகைபோல வெவ்வெவைதாந் தோன்றி நின்ற
இந்தவெனக் குன்புணர்ப்பா லவ்வவையின் புளிப்பன்போ லேய்ந்த வன்றே.

**உருப்பசி:**—பெரியோர் மகர்க்கு நீண்ட காலம் பிரிவை யுண்டாக்கினவளாய்ப் பிழைசெய்தவளா யிருக்கின்றேன்.

**அரசன்:**—வேண்டாம் வேண்டா மிவ்வாறு.

எதுதான் றுயரின்வந் தெய்திற்றவ் வின்ப
மதுவன்றோ வின்னினிமைத் தாதபத்தால் வெப்பேய்ந்தோர்க்
கார நிழலின்ப மாம். (62)

**விதூடகன்:**—ஓய்! அனுபவிக்கப்பட்டனவன்றோ, மாலைக்காலத்தினியனவாய சந்திர கிரணங்கள்; சமயமன்றோ உனக்கு வாசமாளிகையுட் புகுதற்கு.

**அரசன்:**—அப்படியானால் நின்றோழிக்கு வழிகாட்டுவாய்.

**விதூடகன்:**—இதோ, இதோ சான்றோய்! இதோ, இதோ சான்றோய்!

**அரசன்:**—சுந்தரி! இது எனது வேண்டுகோள்.

**உருப்பசி:**—எது தான்?

**அரசன்:**—

அடையா மனோரதத்த னுமெனக்கு முன்னம்
நடைபெற்ற தோரிரவு நல்லூழி யேபோல
நீன்புணர்ப்பி லவ்வாறே நீட்டிக்கி னன்னுதலாய்
பின்பெற்றே னுகுவன்யான் பேறு. (63)

[என்று எல்லோரும் அகன்றனர்.]

**மூன்றுமங்கம் முற்றிற்று.**

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## காசிகண்டம்.

முருகார் குமரன் முன்னவ னடிகளைப்
பெருகார் வத்தொடு பேணிப் பணிகுவாம்.

ஆதியில் அருந்தவ மகிமை வாய்ந்த பராசர மகர்ஷியின் புதல்வராகிய வியாதமுனிவர் பதினெண்புராணங்களையும் வடமொழியில் இயற்றினர். அத்தகைய புராணங்களுள் மிகச்சிறந்ததும், புராண ரத்தினமெனச் சிறப்புப்பெயரெய்தியதும், எல்லாப்புராணங்களிலும்கூறியுள்ள விடயங்களைச் சங்கிரகமாக விளக்கவல்லதுமாகிய **ஸ்ரீ மகாஸ்காந்த புராணமானது** ஸனற்குமாரஸம்ஹிதை, சூதஸம்ஹிதை, சங்கர சம்ஹிதை, விஷ்ணு சம்ஹிதை, பிரம சம்ஹிதை, சூரிய சம்ஹிதை என ஆறு பெரும்பிரிவுகளை யுடையது. அவற்றுட் சங்கர சம்ஹிதையிற் குமாரோற்பவகண்டம், **காசிகண்டம்**, காளிகாகண்டம் முதலிய பல உட்பிரிவுகளுண்டு.

**இக்காசிகண்டம்** மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்னு மூவகை விசேடமு மமையப்பெற்று விளங்கும் காசிநகரத்தின் சிறப்பைக் கூறுவதாயும், வைதிக லௌகிக மார்க்கங்களைப் பலவகையிலும் நன்கு விளக்குவதாயுமுள்ளது. பின்னர் இவ்வடமொழிக் காசிகண்டத்தையே முதனூலாகக்கொண்டு சுமார் 400 வருடங்களுக்கு முன் பாண்டிய தேயத்தில் தென்காசிக்கண் ணரசுபுரிந்து வந்த சந்திர வம்சத்துச் சிற்றரசராகிய **அதிவீரராம பாண்டிய** ரென்னும் புலவர்திலகர் செவிவழி யமிர்தஞ்சொரிந்தாலொப்ப இனிய தமிழ்ப்பாக்களினாற் **பூர்வகாண்டம், உத்தரகாண்டம்** என்னும் இரண்டு காண்டங்களடங்கியதாகக் காசிகண்டமென்னும் நூலை யியற்றினார். அதன் முதற் காண்டத்தில் 41 அத்தியாயங்களும் 1209 திருவிருத்தங்களும், இரண்டாங்காண்டத்தில் 60 அத்தியாயங்களும் 1315 திருவிருத்தங்களும் உள.

## நூல்வரலாறு

பால்புரை வெண்ணீற் றொளிகொள் நெற்றியர்
பகடுடைப்பரமனை யெண்ணிய வுளத்தர்
சிறப்புடைக் கண்டிகை தரித்த மார்பினர்
சிற்றத்தை நூறிய வாற்றருந் தவத்தினர்

இத்தகைய சிறப்புற்றோங்கிய சூதமாமுனிவர் நைமிசாரணியத்தை நோக்கிச் சென்றனர். ஆண்டெய்துழி, முக்குறும் பெறிந்து, முழுநீறு பூசி, மாதவக் கிழமை பூண்டுள்ள தபோதனர் யாவரும் ஒருங்கே 'வருக' வென உபசார வார்த்தைக ளியம்பிக்கொண்டே யெழுந்து உரோமஞ் சிலிர்ப்பக் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க ஆர்வத்தொடு பணிந்து, 'யாங்கள் முன்னோ ரியற்றிய அருந்தவப்பயனே நீரிவணெய்திய' தென்னு வாதரத்தோடு அருக்கிய முதலா முறைப்படிதந்து, புலியாசன மொன்றிட்டு அதில் வீற்றிருக்கச் செய்தனர்.

சிறிதுபொழுது கழிந்ததும், அவ்வனத்தின்க ணுள்ள தாபதர்களெல்லாம் மகிழ்வுடன் அவரை விளித்து, "ஐய! நீர் முன்னம் பதினெண் புராணங்களையும் நன்கியம்பினீர்; இப்போழ்து, நீர் காந்தத்துண் மொழிந்த காசி கண்டத்தை இன்னுமொருமுறை எங்கள் செவிகுளிர உரைத்திடல்வேண்டு" மென்றிரப்ப, அவரவர்கள் வேண்டுகோளுக்கிரங்கிக் கருணைக்கடலாகிய தமது குருவான வியாசமுனிவரை வணக்கஞ்செய்து சொல்லலுற்றனர்.

காந்தத்தில் ஆறு சம்ஹிதைக ளுளவென்பதை,

"முற்ற வோதிய புராணமூ வாறினுட் காந்தம்
பெற்ற தாறுசங் கிதையவை யாறுந்தம் பெயராற்
சொற்றபேர்சனற் குமாரமா முனிவரன் சூதன்
கற்றை வார்சடைச் சங்கரன் மாலயன் கதிரோன்"

என்னும் திருவிளையாடற்புராணப் பாட்டாலுணர்க.

## பூர்வகாண்டம்.

### நாரதர் விந்தத்தைக் கண்ணுற்றது.

சிவஞானச் செல்வம் வாய்க்கப்பெற்ற மகதியென்னும் வீணை தாங்கிய தெய்வமுனியாகிய நாரதபகவான் தெய்வலோகத்தினின்றிழிந்து, தெண்ணிய நீரையுடைய சப்தநதிகளி லொன்றாகிய நருமதை யாற்றின்கண் மூழ்கிக் காலைக்கடன் கழித்து, பூவுலகின்கண் வதிந்துள்ள சிறந்துயிர்கட் கெல்லாம் அவை வேண்டிய பொருள்கள் யாவையும் தடையின்றி நல்கும் பெருமை வாய்ந்த, பரங்கருணைத் தடங்கலாகியும் பிரணவப்பொருளாகியும் விளங்குகிற பரமசிவனைபபோற்றி மீண்டேகும் எல்லையில், விந்தமால்வரையை யினிது கண்டார்.

அப்போது, அம்மலைமீதுள்ள விருக்ஷங்களெல்லாம், ஆகாயத்தை யளாவும் கொம்புகளாலும், பசுமை நிறத்தாலும், பழங்கள் நிறைந்திருக்கும் தோற்றத்தினாலும், அளவிறந்த அண்டங்களைத் தின்று மெய்யிற்றாங்கிநிற்கும் துளப மாலையையும், கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய சக்கராயுதத்தையும் தரித்த மகாவிட்டுணுவே போன்று விளங்கின. அவ்வரைமீது சூல்கொண்ட மின்னல் விளங்குகிற மஞ்சுகள் படிந்திருப்பதை ஒரு யானையானது பார்த்துத் தன்போலும் யானையெனக் கருதிச் சென்று எதிர்த்த போழ்து, எதிர்த்த யானையின் செவி வளிவிசையால் அம்மேகங்கள் சிதறுண்ணுங் காட்சி யெப்படியிருந்ததென்றால், கொல்சினக் களிநல்யானை யொன்று பின்றொடர்வதற்கஞ்சி யேகும் மாவியானைபோன்று மிருந்தது. நீர்த்திவலைகண்மிகுதியாகவுடைய முகிற்படலங்கள் தவழும்படி ஆகாயமுகடளவும் ஓங்கி வளரும் தருக்களெல்லாம், குளிர்ச்சி தங்கிய சந்திரகாந்தக் கற்களின்மீது சந்திரிகை தவழுதலால் அவற்றினின்றும் பெருக்கெடுத்தோடும் நீரை மாந்தித் தளிர்விட்டனவாகி வளரும். கூட்டமாகிய குறத்தியர்கள், பொன் வண்டுகளும் பொறிவண்டுகளும், தேன்வண்டுகளும் மலர்ப்பொதியவிழ்த்தொழுக்கிய தேனைக்குடித்து அம்மலைச்சாரலிற் சூழ்ந்த மேகத்தினாற் கூந்தல் நனையப் பெற்று, மிகவுமுயர்ந்த கொடுமுடிகளிலேறி தமது அளகபாரத்தை விரித்துப் புலர்த்துவார்கள். நீண்ட கிளைகளையுடைய விருக்ஷங்களென்று சொல்லப்படுவன வெல்லாம் சந்தன விருட்சங்களே; வேழமென்று சொல்லப்படுவனவெல்லாம் புழைக்கையையும், நால்வாயையும், மதச்செருக்கையும், கோபத்தையும் உடைய மதநீர் சிந்தும் நல்லயானைகளே. மிருகங்களென்று சொல்லப்படுவன வெல்லாம் வாசனை வீசும் கத்தூரி மிருகங்களும் புழுகு பூனைகளுமே. பறவைகளென்று சொல்லப்படுவன வெல்லாம் கின்னர மிதுனங்களே.

இன்னணம் வளப்பமெய்தப்பெற்ற விந்தமானது, மானுடவுருவமெய்திக் கதிர்ச்செல்வ னங்கெழுந்தருளிய குற்றமற்ற தவத்தினையுடைய வீணமாமுனியைக்கண்டு அவரது அழகிய திருவடிகளை வணங்க வெண்ணிப்போய் எதிர்கொண்டது. தீந்தொடை யணிந்த தெய்வமாமுனிவன் முளில் அழகுபொருந்திய உச்சியையுடைய விந்தமானது உருக்கத்தோடு மிறைஞ்சிற் றென்றால், பாந்தளின் பிடரிற்றங்கிய இக்கடல் சூழ்ந்த பூவுலகின்கண் தவத்தின் மிக்க மேம்பாடுடையது வேறொன்றுளதென மதிக்க வொண்ணுமோ! * விந்த பர்வதமானது, இவ்வாறு நமஸ்கரிக்கவும் தழுவிக்கொண்டு அன்போடு அளவில் ஆசிகூறும் உபவீதமணிந்த நாரதமுனிவர் மனதில் அன்பு பொருந்தவும், சந்தோஷம் அதிகரிக்கவும், முகமனியம்பி அருக்கிய முதலியவற்றைக் குறைபாடின்றிக்கொடுத்து, தாள்வருடிப் போந்த வருத்தத்தையும் தவிர்த்தது. பின்பு, "மாதவ! நீரிவணெய்தியதால் என் மனத்திருளகன்றது; உம்முடைய பாததூளிபட்டு என்பவக்கடல் வறந்தது. இற்றை நாளும் நன்னாளாயது, இனி ஆகாயவரையி லுயர்ந்த விந்தமென்னும் பெயரும் எனக்கு விளங்கியது" என்று அவ்விந்தங் கூறவும் நாரதமுனிவர் பெருமூச்சு விட்டு வீற்றிருந்தனர்.

சிதம்பரம்.

---

## பெண்கல்வி.

——(*)——

'கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி' எனத் தெய்வத்தன்மையுற்ற ஒளவையா ரியம்பிய இக் கல்வியினும் சிறந்த பொருண் மற்றொன் றுளதோ? ஐயந்திரிபறியாமை யென்னு முக்குற்றமு மறக்கல்லுங் கல்வியின் பயனையீங்கு முற்றுங்கூற வென்னு லமையப் பெறாதாயினும், நம் முத்தமிழுலகம் மூதறி ஞராற் பெண்கல்வியினும் பெருமையடைதல் வேண்டு மென்னும் வேட்கை தூண்ட யான்றெரிந்த வளவியம்புகின்றேன். சீரியோரி யாவரும் 'இன்னுமியாமே யெழுந்தாலன்றி யிக்குறை நீங்குவதருமை' என நினைந்து அன்னார் முன் வந்து என தார்வத்தை நிறைவேற்றுவாராக.

I. திருடர் முதலாயினோரா லபகரிக்கப்பட்டுக் குறைவுபடுறுஞ் செல்வப் பொருளினு மிக்க சிறப்புவாய்ந்த விக்கல்விப் பொருளோ, அத்தகையோரா லபகரிக்கப்படாதது. பொறாமையுற்ற புல்லறிஞரியற்று மிடையூற்ற

---

* தவமேமேலாநெறிபயக்குந் தவமே சிவனார்தமைக்காட்டுந்
தவமேதுறக்க மடைவிக்குந்தவமே நரனைத்தேவாக்குந்
தவமேவலாரிதிசைக்கிறைவர்சார்ங்கனயனுமாக்குவிக்குந்
தவமே கிடைப்பிற்கிடையாததுண்டோவென்றிசாற்றினனால்.

மென் காலுக்குச் சற்றுஞ் சலிப்பின்றி யெஞ்ஞான்றும் பயிற்சிக்குத் தக்கவாறு தான் பயக்கும் பலனிலொன்றும் பொறுமையினைக் கைக்கொண்ட வன்னார் விடா முயற்சியென் குளிர் நீரூட்டச் செழித்தோங்குவதும், குறைவுறாப் பாலாழி போன்றதும், தனைவேட்டவர்க் கீயப்பெற்றூருளத்து நிறைவுறு வதும், ஈந்தாருளத்தோ முன்னிலும் பன்மடங் கூற்றெடுத்து வெளிப் பொழி வதும், மறுமையின்பத்துக் கேதுவாகிய இம்மை யறநிலைகளிற் பகுத்தறி வுடை யான்மாக்களை நிறுவி யவ்வழியே பொருளீட்டச் செய்வதும், அவ்வழி யே யின்பம் நுகர்விப்பதும், வீட்டின்பத்துக்கு முக்கியக் கருவியாயுள்ளதும், நேரும் கவலை மிடி யெத்தகைக் கொடியன வாயினு மவற்றை யொரு பொரு ளாக் கொள்ளாதி யாவுமவன் செயலென வறியுமறிவைப் பெரும் பான்மை யும் புகட்டுவது மாகிய தன்மைத்தாம்.

II. ஆடவர்க்கு நான்கு புருடார்த்தங்களையும் புகழையும் கொடுத்தல் செய்யுமிதுவோ, மகளிர்க் கச்சநாணம் பயிர்ப்புமடமை யென்னுங் கற்பி னரணினைத்தாக்கி யழிச்கும் பான்மையுடைத்து? "இதுவோ! அப் பெண்பாலார் தம்வாய்மையினின்றும் வழுவிப், பதிசேட்பி னீங்கியாங்குப் பத்தினியாரெனும் பெயரை முற்றத் துறந்து, அன்புசா லொழுக்க மிலராய், ஜீவகாருணியஞ் சிதைத்தனராய், அடக்கமில்லா உள்ளத்தராக, தம்மைத் தழுவியோர் மாட்டுள்ள அரிய விடயங்களை யயலாரியாவருஞ் செவியுற்று நக, அன்னாரைக் கொண்டலர் தூற்றிப், பொறை பொருந்தாச் சொற்புகன்று, சூசருட னுளவளாவி, அழுக்காறமையப் பெற்றுத் தெய்வஞ் சிந்தியாதிகழ்ந்து, இவைகளினால் வருந்துன்பத்தைப் புல்லொக்கவுன்னிக், கொலைக்கஞ்சாக் கூற்றன்னவராம் வேசையராகச்செய்வது" எனப்பழியான வீண்மனோராஜ்யஞ் செய்கின்றனர். கணவர் வீட்டிற் காரியம் நடத்தவும், அக்கணவர் ஏவல்வழியும் நூல்வழியு நன் கொழுகவும் பெற்றூர் கற்பிக்கக் கற்றுமங்ஙன மொழுகுமடவா ரன்றோ கற்புள்ளாரென வறியாது மருளுமிவர்க ளெக்காலமறிவர்? இவர் கற்றனரோ வன்றி மற்றவரோ வெனின் மற்றவரே. இவரு மெழுதப் படிக்கத்தெரிவதனாற் கற்றனரென்று தம்மைப் புகழ்கின்றனர். கல்வி யென்பதற்குப் பதார்த்த மறியாதவரிவரே.

III. எழுதப் படிக்கத்தெரிதல் நன்னூல் கற்றற்கோ ரூன்றுகோலன்றி மற்றன்று. ஊன்று கோல் கையமையப்பெற்ற வொருவன் அதனுதவியால் தான் செல்லவேண்டிய வெகு தூரநெறி கடந்து ஓர் நற்றலம் வீற்றிருப்பதாக கவும், மரக்கலம் பெற்ற வொருவன் கரையடைந் திருப்பதாகவும் பாவிப்பது போன்றே யெழுதப் படிக்கத் தெரிந்தவுடன் கரையிலாக் கல்விகற்றது போ லிறுமாந்திருத்தல்.

IV. எழுதப்படிக்க மாத்திரமறிந்த மங்கையர் சோரநாயகரைத் தெரிந்து வேட்கைக் கடிதம் வரைகின்றனர். இக்குற்றச் செயனீக்கு நூலாராய்ச்சி குறைவாதலின் அதனைப்பெருகச்செய்வது நுண்ணறிவன்றிக் கல்வியே யின்மையாக் கல் நலமெனக்கருதுமவர், மகளிரய லாடவனை வேட்கையுறல் தனுவாலெனக் கந்த மூலமருத்தி யில்லொழுக்க நடத்தவிச்சை கொண்டவரே; அன்றியம் மகளிரயலினுடியாடவரா யணையச் செல வுய்ப்பதுவோ வவர்காலே யெனவக் கால்களைத் துண்டித்து மனங்களித் தில்லறமியற்றலாமென விச்சைகொண்ட பதடியரே! எழுதப் படிக்கத் தெரிவதையே நிறைவுற்ற கல்வியென நினைந்து, அவர்கள் கல்வியை மட்டாக்கும் பெற்றோரின் அறிவீனத்தாற் கற்பிலக்கணமு மில்வாழ்க்கை நிலையும் அறியாது கணவர்கடுங் கோபங் கொள்ளாக் காலத்துங் கூட, அவர்கள் வறுமையைத் தமதாயெண்ணாதும், அழகின்மையை விழுமிதாக் கொள்ளாதும், குணமின்மையைக் குணமாகப் பாவியாதும், கொடிய வஞ்ச நினைந்தயற் புருடனை யவாவுற்றுக் கடிதம் வரைந்து தம்பதிக்குச் சதி செயு மிந்த மாதரை யுதாரணமாகக்கொண்டு, "கற்றறிந்தார் கணவர்க்குத் துரோகிகள்" என்பர் பலர். இக்கணவர் கருணையோடு நடத்துங்காலே குத்திரஞ் செய்கின்றன ரெனின்,

'இனிய கேள்வர் முனியின் எதிர்நின்று
துனிகொ ணெஞ்சொ டெதிர்மொழி சொல்கலார்
அனைய கேள்வர் முனியினு மன்பொடுங்
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே.'

என்றதற்கு மாறாய், அவர்களைப் பதில்வைது கள்ளக்காதலரொடு கசிந்து தூணிற் கட்டுகின்றாரு முளர். சிற்சில சமயங்களில் அயற்காதலரால் துர்ப்புத்தி கற்பிக்கப்பட்டு, அதனாற் சொந்த நாயகரிடத்துத் துவேஷங்கொண்டே விடமிட்டுத் துஞ்சுவிக்கின்றனர். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! நாயகன் நாயகி யென்ற விருதிறத்தார் வழக்குந் தீரக்கேளாது, அநியாயவழக் கிடுவராகிய நாயகியரைக் கொண்டே மற்றாரைத் தண்டனை யுட்படுத்துங் கொடுங்கோன் மன்னரிச் சோரநாயகரே. இவைகளை முன்னரே யாராய்ந்த கணவர் அயலாடவர்க்குக் கடிதமெழுதாவாறும், சம்பாஷியாவாறும், கண்டிப்பின், 'அறக்காத்தான் பெண்டிழந்தான்' என்பது தம்மை யொத்த பெண்டிரையே யெனத் தெரித்தல் போன்றெவ்வண்ணமோ கள்ளக் காதலர்க்குக் கடிதத் தாலறிவித்து அயலிற் செல்கின்றனர். இன்னாரைக் கற்றன ரென்றெங்ஙனஞ் சொல்வேம்.

VI. இவர்கள் தமயந்தியின் பாததூளிக்குள்ள மகிமையைக்கேட்டனரா? சந்திரமதியின் கற்பும் அநசூயை தன்னாற்றலு மறிந்தனரா? இன்னும் லோபாமுத்திரை, துரோபதை, சீதை, முதலிய பத்தினிக்கடவுளார் செயலு மறிந்தாரில்லை. ஐயோ! இத்தகைய மகளிரன்றோ பெண்கல்வி பெரிதும் பிழை

பாடுடையதெனச் சொல்லக் காரணமாயுள்ளார். இவர்களைச் சொல்லக் குற்ற மென்னை ?

VII. கண்ணெனத்தகு மெண் ணெழுத்தில்லாக் கபோதியராகிய மாதரார், பெற்றரீந்த கம்பொக்கும் படிக்கப் பயின்ற பயிற்சியின் பயனை யறியாது, அண்மியாரைப் புடைத்தலே தலையாய பயன், மற்றில்லென அவ் வாறு செயலொப்ப, வரைவின் மகளிர்க்குத் தமை மாதிரியாக் கொளக் காட்டுந் தீச்செயலை நன்காயுங்கால், படிக்கத் தெரிவதன் பயனாகிய பன்னூற்பயிசி யொன்றுளதென்றறிவித்தல், அதை யோங்கச்செய்தல், கற்ற கணவர்க்காயினுந் தம் மக்கள் கடிமணஞ் செய்யப்பெறல், அதனு லக்கணவர் கற்பிக்க வெண்ணி யாங்கீவர் கற்பிக்கப்படல், இவையாவுந் தம்மநுபவத்தி லுடைமை, ஆகிய விவைகளிற் சற்றேனுமில்லாக் குறைவிற்குக் காரணமாயுளராகிய பெற்றரன்றே வவ்வசையைப் பெற்றார். பெற்றார், கல்வி பயிற்றாது தாம் அன்புகனிந்து வளர்க்கு மருமை யெவ்வருமையோ? இவர் தம்மருமைச் சிறுமிய ரறியாது குற்ற மொன்றியக்கா லஃதுற்று நோக்கி யீதினிச் செய்யன்மினென மதி கூறியும், அச்செயன் முடிவைப் புகன்றும், சகவாசப் பயனைச் செய்திடினது நீத்தொறுத்தும் வற்புறுத்தியும், தாமே யாசிரியத் தன்மை பூண்டும், அன்றி, கற்றொழுக்கஞ்சான்ற மதியின் முதியாரைக் கொண்டு கற்பித்தும் மேன்மையாக்காது விடுக்கின்றனர்.

VIII. சிலர் 'கிறிஸ்தவமிஷன் சங்கத்தார் பரீக்ஷையிற் றேறியதனு லன்றே எஞ்சிறுமியர் பொம்மை பெற்றனர்'! என்று புகழ்கொண்டாடி, அவர்கள் எழுதப்படிக்க வியன்றவர்களாதலி னிருமகிழ் வெய்தி, அம்மானை, ஒப்பாரிக்கண்ணி, ஏலப்பாட்டு, கப்பற்பாட்டு, தெம்மாங்கு, நாடகம், விவேக சாகரம், இவை போன்ற நூல்களிற் பயிற்றியும், இவைகளன்றியும், பாட சாலைப் படிப்பே விறைவுற்றதென அம்மட்டோடு விறுத்தியுங் கெடுக்கின்றார்கள்.

IX. ஈதுமன்றி யிவர்களே தம் ஆண்மக்கள்போற் பெண்மக்கள் யாது உத்தியோகஞ் செய்து சம்பாதிப்பர் ? கற்பிக்கப்படி னெமக்கி யாது பயன்படுவர் ? இவர்க ளுத்தியோகத்தாற் பொருளீட்டி யிடுவதெமக்குத் தேவையின்றென்றே புகல்கின்றனர். இதன் காரணமா யிருப்பவர், பூர்வ நாகரிகமறியாப்புது நாகரிகரேயாம். இவர், இருநாகரிகமு மில்லா வொருவரிடஞ் சென்று, ஐய, நுஞ் சிறுமியரைக் கல்விபயிற்றல் நலமெனின், நம் முன்னோரின் வழக்க மில்லா வழக்கம் விள்ளல் வேண்டாம் என்கின்றனரவர். அதைக்கேட்ட புது நாகரிகராவது இவர்கண், முன்னோர் வழக்கத் தபிமானங் கொண்டமையின், நம்முன்னோரிற் பெண்கள் கல்வி யடைந்திருந்ததையும், அவர்கண் மற்றைய வளவிலா விடயங்களி லடைந்துள்ள நாகரிகத்தையும், புராணேதி காசங்களினும், சாஸ்திரங்களினும் புகழ்ந்தெடுத்துக் கூற வறியாது, "அவர்களு மநாகரிகர், அப்புராணங்களோ மனே

பாவனை யெனச்சொல்லி முன்னோர் அறியாவழக்கம் நீருங் கைக் கொண்டனிரா? ஆயிற் கபடமறியா வேழையராகிய நம்முன்னோர் பொய்புகன்றதேயில்லை. நீரும் அங்ஙன மிருந்தாற்றுவீரா? ஆற்றீர், ஆதலின், நீர் சிறுமியரைக் கல்வி பயிற்றல், பயிற்றுவித்தல் வேண்டும்'' என்கின்றதையே சாதிக்கின்றனர். இப்புது நாகரிகர் மௌனஞ் சாதிப்பினு நன்மை பயக்கும்.

X. உத்தம லட்சணமும், உத்தமகுணமு மியற்கையின் அமையப் பெற்று, எழுதப்படிக்க வியன்ற மங்கையரும், அன்றி யதுவுமறியா மங்கையரும் கற்பின் வழாது, கவின் பெறுகின்றனர். ஆயினுமிவரில் முற்பவப் பயனெய்தப் பெற்றாராற் கற்றலிலாக் கணவர்க் குடன்பட்டுழன்று, அக்கணவர் சாகபட்சண நாற்கால்களை நடத்திய தேய்ப்ப நடத்தி வருத்த, மனங்கசந்து பின், பெற்றோர் செயற்குப் பரிதபித்தும், கடவுளைக் கண்ணிக் கசிந்துருகியும், இவ்வாழ்க்கை நிலை, கற்பொழுக்கம், கணவரிடத் தன்புடைமை யிவை நீங்காதே யிருக்கின்றனரோமிகச் சிலர்; மற்றுக்கொடுமை யாற்றாது தற்கொலை புரிகின்றனரே பலர். அந்தோ! இவர்கண் மனம் நூல்வழித்திருப்பப்படின் எங்ஙனமோ நன்மை பயக்கும், அதனினுமிக்க பயனீயும், கணவர் கற்றிருப்பாராயின். எங்ஙனமாயிடினும், பெண்கள் கற்பிக்கப் படின், ஆண்பாலார் எத்துணையோ கல்வியிற் சிறந்து மல்குவர். பெண்கள் கற்றிடின் தம் முதுவயதினும், மருகியரைத் தம்மருமைச் சிறுமியரேபோன் றன்புடனழையாரா? இன்னு மெவ்வனுகூலமோ வெய்திடும்.

XI. ஆகவே, இவ்வனுகூல மறிந்தே யெழுதப் படிக்கக் கற்பித்த வீன்றாருந் தீயபயக்குநூலும், யாதும் பயவா நூலுங் கற்பிக்கின்றனர். ஈது நூலின்னதென் றறியாத்தன்மையாலேயாம்.

XII. 'உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா-மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு'

என, நூலின்றன்மை அறைந்த வான்றோரோ,

'நூலினியல்பே நுவலினோரிரு பாயிரந்தோற்றி மும்மையினொன்றாய், நாற்பொருட் பயத்தோ டெழு மதந்தழுவி, யையிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ, டெண்ணான் குத்தியினோத்துப் படல, மென்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை, விருத்தியாகும் விகற்பநடை பெறுமே'' எனக்கூறிய விவை யமையப்பெற்று, அதுவும், பெருங்காப்பியம் காப்பியமென விரண்டிலொன்றாயும், அன்றி, நீதியை மாத்திரம் போதிப்பதாயு மானவையே நூலென்பதும், அல்லாதன நூலல்லனவென்பதும், அவை மனக்கோட்டந் தீர்க்காவென்பதும், ஒளவையா ரருளிய 'நூல்பலகல்' என்றதும், மேற்றன்மையனவற்றையே யென்பதும், தெற்றென விளங்குதலின் அதை

யநுசரித்துக், 'கற்க கசடறக் கற்பவை' என்ற தனுலும், நூல்போன்று மாலருத் துவன பலவாதலால். 'ஆராய்ந் தமைவுடைய கற்பவே பாலுண் குருகிற்றெரி ந்து' என்பதனுலும், நல்ல இவை யெனத்தெரிந்து தஞ் சிறுமியர்க்குக் கற்பித் தல் வேண்டும்.

XIII. ஆயின், சிறுமியர் கற்பிக்கப்பெற சிறு வாசகப் புத்தகங்களில் லாக் குறைவை முற்றவாய்ந்த, கனம், முருகேச முதலியாரன்ன முழுமதிக் கலே ஓர் நள்ளிருட் கூந்தல் நங்கைமா ருளவிருளகன்றிட மாதர்நீதி முதலா மாதரம் பெருகு மருகலாவசன நூலியற்றினர். இத்தகையோர் போன்று, எழுத்தறியத் தொடங்கு மினியவாய்க்குதலைச் சிறுமியர்க்காம் நீதியார்ந்த சிறு கதையும் படிப்படியாய்ப் பல்குதற் பொருட்டே என்றும் மல்குக.

XIV. இவ்வகை நூல்கற்று, ஆராயின், பின்னிவைகட்கு முதனூலாய முக்குற்றமுங் கல்லவல்ல நாயனர் முதுமறைத் தமிழ் மொழியிலும், தெய் வப்புலவர் சிரமேற்கொள் ஔவை யருமொழியிலும், நாலடி முதலாம் சால்புடைத் தனிப்பன்னூலிலும், விதித்தன செய்தொழுகி, விலக்கி யன வொழித்து, இல்லறக் காப்பியமைந்தாம் வேதம் எனச்சிறப்புப் பெயர் பூண்ட விதிகாசங்களிற் காப்பியத் தலைவரிடத்துண்டாய பத்தினியரின் ஒழுக்கமன்பு முதலியன வற்றைந் தாமே படித்தறிந்து, அவ்வாறு நடக்க முய ன்று பிரம விஷ்ணுக்களின் பிரதாபத்தையும், சிவபிரானுடைலயும் விளம் பப்புகுந்த பூர்வபுராணங்களி லாங்காங்குள்ள பக்த சரித்திரங்களையும் பார் த்து, அவ்வடியார்தங் கற்பின் வழாக் காதலிய ரொழுக்கங் கைக்கொண்டு, அங்ஙனம் வழுவும் வஞ்சியர் எங்கணு நிறைந்த வெம்பெருமாணற் றண்டனை யுட் படுவரென வஞ்சி,

'மருவிய காதன்மனையாளுந் தானு
மிருவரும் பூண்டிர்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று' என்றபடி

இல்வாழ்க்கை யென்ற சகடமிழுத்துப் பத்தினிக் கடவுளா யாவரும் போற்ற வீற்றிருந்து, அறுவகைப் பிரிவி லெவ்வகைப் பிரிவாலேனு மயற்புறந் தங்கண வர் சென்றிடின், அன்னார்க்கே, உள்ளக் கருத்தையும் வேண்டுகோளையும், புறப்படுத்தி யன்பாங் காந்தசத்தா லாவியன்னரை யீர்த்தகப் படுத்தி, அன்றி யும், 'அன்னைதயையும், அடியாள் பணியும், மலர்ப்பொன்னினழகும், புவிப் பொறையும், வன்னவுடல் வேசிதுயிலும், விறல் மந்திரி மதியும், பேசில் இவையுடையாள் பெண்' என்ற வாறிவ்வகைப் பெண்மையை யுடையராய்ச், சிறந்த விற்றுணையாகி, தஞ்சிறுவரை நல்வழி நடத்தி நன்மார்க்கங் கற்பித்து, அவர் மெய்வளர்க்க விரும்பி யறுசுவை யுணவூட்டி யாங்கு, மெய்யறிவு வளர்க் கக் கல்வியென்னும் நீரூட்டி, யவ்வறிவெனும் பயிர்னும் பயனுகிய, ' ஈன்ற

பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்,' என்றபடி, அப்புகழ் மகிழ் விரண்டுந் தெவிட்டவுண்டு,

"கற்பின் மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி ணர்கொண்ட காதல ஞருயிர்ச்
சுற்றமி யாவுந் துறக்கத்தி னெய்துமால்" என்றபடி

யாவரையு மேற்பத மெய்துவிப்பர்.

XV. இப்பொழுது கல்வியறிவிற் பெண்கள் க்ஷீணதசை யடைந்திருக்கிற நம்மிந்தியாவில், பூர்வங் கற்றிருந்த மகளிர், இப்பொழுது கற்றிராமகளிரள வென்பதே திண்ணம். ஆயின், ஆண்மக்களோ நீதிநிறைந்த நூல்களை ஆங்கிலமாகிய விராஜ பாஷையிலாவது கற்றிருக்கின்றனர். இத்தகைப் பெருமையும் பயனுமீவதாகிய கல்வி, நம்மிந்தியாவிற் பெண்பாலாரிடத்தும் க்ஷீணதசை யடைந்ததைப் பற்றி யாவரும் பரிந்து தந்தனங் கல்வியிரண்டும், இல்லிற்கிசைந் தொழுகும் பெண்டிராய்ச் சிறுமியரையாக்கி அன்னார்க்கே சிறந்த பூணாகுங் கல்வியின் பொருட்டுச், செலவுய்த்தல் வேண்டு மென்பதே யென் தாழ்மையான விண்ணப்பம். அன்னிய கண்டத்தினின்றும், அன்னிய மதத்து மிஷன் சங்கத்தார் சுதேசச் சிறுமியர் சுவிசேஷங் கற்றுத் தஞ்சமயத்தொழுக்க நாடாதொழிய, எடுக்கு முயற்சியிற் பன்மடங்கு முயன்று, சுயபாஷாபிமானம், மதாபிமானம், நன்று தீதிதுவென வறிநடுவுநிலை, தேசாபிமானம், நடையுடை பாவனையி னயம், தெய்வபக்தி இவை போல்வன வுடையீராம் நீர்மைபற்றி, அத்தகையாராலுண்டாகு மல்வழியருகிட நல்வழியாந் தொல்வழி புதுக்கல் வேண்டு மென்பதே, அதற்குறிய கருவியும் சில வென்பதே.

அவை, (1) கலைஞருந் தனிகரு முன்னிற்றல்

(2) பெண் கலாசாலை பலவியற்றல்

(3) கல்வி யொழுக்கஞ் சான்ற கலைஞரைக்கொண்டு கற்பித்தல்

(4) சிறுமியர்க்குரிய நூலியற்றல்

(5) சோதனை வைத்தல்

(6) இன்னுமின்றி யமையாதனவியற்றல். இவ்வாறு கன்னதனக்காரிகையராகுங் கன்னியரை மேகலைக் கன்னியராய் மேவுவித்தல்.

சு. ஆதிமூலம்.

# THE LIGHT OF TRUTH OF TIRUKKOVAIYAR

## திருக்கோவையா ருண்மை விளக்கம்.

பரமாசாரியசுவாமிகளாகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருக்கோவையாரென்னும் அகாதஞானப் பிரவாகபயோததியின் அடியிலே எவர்க்கும் கிட்டுதற் கரிதாய்க் கிடந்த விலைமதிப்பில்லா ஞானார்த்த ரகசிய லக்ஷியார்த்த சிந்தாமணிப் பொருள்களை நம்போலிய ஏழைகள் பெற்றுய்யுமாறு கைம்மாறில்லாப் பெரிய ஞானம்புதம்போலப் பெயர்த்துத் தந்தருளிய அறிஞர் பெருமானும் ஞானசாரியரையும், அவரால் அருளப்பட்ட திருக்கோவையா ருண்மையையும் அறியாதார் யாரே! இந்நூலின்கட் சிவபெருமானை நாயகியாகக் கூறியிருக்கும் மரபறியாத சிலர் மயங்குவாராயினர். அன்னர் மயக்கந் தெளியச் சில நியாயங் காட்டுதும்.

(க) ஸ்ரீவாகீசர் சிவபெருமானை இழிந்த சடப்பொருள்களுட்படுத்தி, "இம்மணிநீ, இம்முத்துநீ" என்றும், "மறிகடலும் மால்விசும்புந் தானேயாகிக் கோதாவரியாய்க் குமரியாகி" என்றும், "கல்லாகிக் களறாகிக் கானுமாகிக் காவிரியாய்க் காலாறாய்க் கழியுமாகிப் புல்லாகிப் புதலாகிப் பூடுமாகி" என்றும் பலவாறாகத் துதித்தமை அன்புடைமை பற்றியன்றோ? ஸ்ரீவாகீசர் "அம்மைநீ மாமியுநீ" என்று பெண்பாற்பட்ட தாயாரும் மாமியாருமாகத் துதித்தமையும் அன்பு காரணமாகவன்றோ! சிவபெருமானை அத்தியாசிரமோபநிடதம் "நீரே குமாரர், நீரே குமாரி" என்று புகழ்ந்தமையுங் காண்க. "ஏறுடையானெனை யாளுடை நாயக னென்னுள் புகுந்திடிலே" என்றும், "என்னுடைய நாயக னாகிய வீச னெதிர்ப்படு மாயிடிலே" என்றும், "என்னை முன்னாளுடை யீச னெழுந்தரு ளப்பெறிலே" என்றும், "இந்து சிகாமணி யெங்களை யாள வெழுந்தரு ளப்பெறிலே" என்றும் "ஈறறி யாமறை யோனெனை யாள வெழுந்தரு ளப்பெறிலே" என்றும் வரும் திருவாசகத் திருப்படையாட்சித் திருவாக்கியங்களினாலே சிவபெருமான் நாயகனென்பது மாத்திரம் பெறப்படுகின்றதன்றி வதூவர பாவத்தினாலே ஈண்டு ஆன்மா நாயகியாகவும், சிவபெருமான் நாயகராகவும் கொள்ளப்பட்டிலரென்றும், ஆன்மாவை நாயகி என்று கோடற்குரிய தேவாராதிகளிலேபோல "கைவளை" "பணைமுலை" முதலிய குறிப்பு மொழிகள் அத்துணுக்கை வாக்கியங்களிலே இல்லையாமென்றும் அறிக.

வதூவரபாவம் பேசப்படாத விடத்துத் திருவாசகத்துத் திருப்படையாட்சியிலே சிவபெருமான் நாயகராக அவருக்கு நாயகி ஆன்மாவாகச் சொல்லப்படவில்லை என்றும், அதினால் வதூவரபாவம் பேசப்பட்ட திருக்கோவை

யாரிலே பரும்பொருள் நாயகிபாவத்திலே பேசப்பட்ட ஆன்மா நாயகபாவத்திலே பேசப்பட்டதாகவும் உணர்க.

(உ) இனி "மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருள்" எனவும், "மன்பெருமா மறைமொழிகண் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கு - மின்ப மொழித் தோத்திரங்கண் மந்திரங்களி யாவையினு - முன்பிருந்து மற்ற வன்றன் முகமலர வகநெகிழ்ந்த-வன்பினினேந் தெனையல்லா லறிவுறு மொழி நல்ல" எனவும், "ஏழையடியாரவர்கள் யாவை சொன சொன்மகிழுமீசன்" எனவும், "குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும் வணங்கி வாழ்த்துவ ரன்புடையாரெலாம்" எனவும் போந்த திருவாக்குக்களுக் கிசையச் சிவத்தை யன்றி அவமொன்றி மறியா அன்புடையாளர் சிவலிங்கப் பெருமானைக் கல்லா லெறிந்தும், கள்ளன், பித்தன், சுடலையாடி முதலிய சொற்களைச் சொல்லி இகழ்ந்தும், மலராகவும் துதியாகவும் கொள்ளுமாறு செய்வர். அன்பின் செயல்களையும் அன்பின் மொழிகளையும் பார்த்து இதுவிதி இது விலக்கென விதிவிலக் கிறந்துநின்ற சிவபெருமான்பால் விதிவிலக்கறிவிக்கப் புகுதல் பேதைமையன்றோ? இதனுன் வடமொழி தென்மொழிக்கண் உள்ள சுருதிகளில் வண்டு, பதங்கம், மேகம், இருதுக்கள், காலம், குமரன், குமரி, தாய், தந்தை, மாமி, மாமன், நாயகன், நாயகி என்று குறிப்புப் பொருளின் முற்றச் "சொற்பா லமுதிவள்", "மடமான் விழிமயில்", "அன்னம்" எனத் துதிக்கப் படுதலால், "வேதமதுலரக்க நின்ற வியன்புகழனைத்துமேலா நாதனை நணுகு மெல்லா நதிகளுங் கடல்சேர்ந் தென்ன" என்றவாறு, அப்பெயரெல்லாம் நதிகள் சமுத்திரத்திலே போயொடுங்கினாற்போல, இன்னசிறப், இன்ன வுரு, இன்ன பெயர் என்றறியலுறாப் பரமானந்த சாகரத்திலே போயொடுங்குமாம் என்க. ஸ்ரீ ஸ்காந்தோபபுராணமாகிய பக்தவிலாசத்து ஸ்ரீ சுந்தரர் சரித்திரம் பேசப்பட்ட ஏழாம் அத்தியாயத்திலே, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார்க்குச் சிவபெருமான் எவ்வடிவத்தோடு எழுந்தருளினரென்றும், ஸ்ரீ சோமாசிமாற நாயனர் சரித்திர முரைக்கும் அப்பக்த விலாசத்து அறுபதாம் அத்தியாயத்திலே அவருடைய யாகசாலையில் அவருக்குச் சிவபெருமான் எவ்வாறு காட்சி கொடுத்தருளினர் என்றும், அகஸ்தியர் சங்கிதை ஆலாசிய மான்மியத்து ஐம்பத்தோராம் அத்தியாயத்திலே சிவபெருமான் எவ்வடிவுற்றுப் பால்சுரந்தருளினரென்றும் பார்த்தறிந்தார் ஒரு பொழுதும் மயங்குவா ரல்லர்.

பேரூர்ப்புராணம் "உயர்ந்தவுந் தாமே யிழிந்தவுந் தாமே யெனமறை யோலமிட் டுரைக்கும் - வியந்ததஞ் செய்கை யிரண்டனு ளொன்று வேதிய னுகிமுன் காட்டிப் - பயந்தரு மிறைவர் மற்றதுங் காட்டப் பள்ளனுய்த் திருவிளை யாட்டா-னயந்தபூம் பணையின் வினைசெய வன்பர் நண்ணுமு னண்ணின ரம்மா" எனத் திருவெண்ணெய் நல்லூரிலே ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார்க்

குச் சிவபிரான் உயர்ந்த பிராமண வடிவத்தோடு தரிசனங் கொடுத்தருளின தோடமையாது, மற்றெவ்வடிவத்தோடு அவர்க்குப் போதியம் பலத்திலே பிரசன்ன ராயினரென்றும் மேலைச் செய்யுளால் அறிக. சுருதிகளிலும் புராணங்களிலுங் கண்டவாறு அடியார்களுக்கு ஆங்காங்கு அநுக்கிரகஞ் செய்யும்படி தமக்கு அவ்வப்போது வேண்டியதோர் வடிவங்கொண்டு ஆவிர்ப்பாவமாகி விரைவிலே தோன்றி மறையும் இந்திர தநுப்போல அந்தர்த்தானமாதல் அச்சிவபெருமானுக் கியல்பாம் என்க.

ஸ்ரீஞானசம்பந்தர் முதலிய மூவர் தேவாரங்களி லிருந்து "ஏர்பரந்த வினவெள்வளை சோரவென்னுள்ளங் கவர்கள்வன்" என்பது முதல் "உண்டவாறு மிவை யுணர்த்து வல்லீர்களே" என்பதிறுதியாக வுள்ளவற்றிற் சிவபெருமான் நாயகனாகவும், மூவரும் நாயகிகளாகவும் ஏற்பட்ட அந்நெறியானே, கோவையாரினும் சிவபெருமான் நாயகனாகவும், மாணிக்கவாசக சுவாமிகள் நாயகியாகவும் ஏற்படுதல் வேண்டுமென்ற வியதியில்லை. ஸ்ரீஞானசம்பந்தரும் வாகீசரும் ஒரேகாலத்தினரா மென்பதும் இவ்விருவர்க்கும் பின்னர் அவதரித்தார் ஸ்ரீ சுந்தரர் என்பதும் பக்த விலாசம் பெரியபுராணம் ஆலாசிய மான்மியம் தேவாரம் என்பவற்றால் உணரக்கிடத்தலானும், வாகீசர் "நரியைக் குதிரைசெய்வானும்" என்றும், வைகைத் திருக்கோட்டினின்றதோர் வில்லையுந் தோன்றும்' என்றும் சிவபெருமானைத் துதித்தமையானும் முந்தினவர் மாணிக்கவாசக சுவாமிகள் என்பது பெறப்படுதலால், அவர் சிவபெருமானையும் ஆன்மாவையும் முறையே நாயகியாகவும் நாயகனாகவும் உருவகஞ் செய்தார் என்க. மூவரும் தேவாரம் பாடினர்களன்றி அகப்பொருளடக்கிய நானூறு கலித்துறையாற் கோவை பாடிற்றிலராகலின் அம்மூவரும் சிவபெருமானையும் தம்மையும் ஒவ்வோரிடத்தில் முறையே நாயகனாகவும் நாயகியாகவும் உருவகஞ் செய்தவாறு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் உருவகஞ் செய்யாது சிவபெருமானையுந் தம்மையும் முறையே நாயகியாகவும் நாயகனாகவும் கோவையில் உருவகஞ் செய்தார் என்க. கோவையிற்போலத் தேவாரத்தில் நாயகி தோழி செவிலி நற்றாய் முதலியோர் விஷயங்களும் பிறவுங் கூறற்கு அவகாசமின்றாம் என்றும், அவ்வாறு கூறாத தென்னையென வினவல் தவறாம் என்றும் உணர்க.

(௩) நமச்சிவாயன் எனப்படும் ஒருவன் சந்திரமதி வேஷமிட்டு நாடக நடிக்குங்காலத்தில் அந்நமச்சிவாய சந்திரமதிக்கு நாயகனாய் வேஷம் பூண்டோன் அந்நமச்சிவாயனை நாயகிபாவத்தில் வைத்து, "என் பிராணநாயகியே!, என் அன்னமே! என் குயின்மொழியே!, என் கிளிமொழியே!, என் மயிலே!" என்று நாடகக் காலம் முற்றும் விளித்தலால் அவனுக்கு அந்நமச்சிவாய னென்பான் நாயகியாய் விடுவானல்லன். அதுபோல, அகப்பொருட் கோவைத்துறையிலே அமைத்து அன்பினிற் பழுத்த பெரியோர் ஆண் பெண் அலியிறந்து நின்ற சிவத்தை நாயகிபாவத்தில் வைத்துத் திருக்கோவையாரிற்

கண்டபடி தில்லை யன்னாள் சிற்றம்பல மனையாள் என்பன முதலியனவாகத் துதித்தலால் அவர் நாயகியாம் பெண்ணாய் விடுவரல்லர். கோவையும் நாடக மாமெனத் தஞ்சைவாணன் கோவை யுரைகார ருரைத்தமையுங் காண்க. இதுவே நாடக வியலுடையார்க்குக் கருத்தாதல் உணர்க.

(ச)உலகத்திலே தன்புத்திரனை என் அம்மையேஎன்று உவப்பினாற் பெண்பாலாக்கித்தாய்தந்தையர் அழைத்தல் முறையாம் என்று இலக்கண நூல்கள் விதிக்கின்றனவே. உலகத்தினும் அவ்வாறழைத்தலை யாம் காண்கின்றேமே. அதனால் அப்புதல்வன் பெண்ணாய்விடுவானன்றே? அங்ஙன மழைத்தல் மகிழ்வின் மேலீடே யென்றே கொள்ளப்படும் என்க.

(ரு) ஒருவன் தனக்குப் பிராண னொத்திருந்தா ரொருவரிறந்து போனால் அவருடைய சாவை மனசின் கண்ணே முற்று முணர்ந்தானேனும் வாயினாற் சொல்லிப் புலம்பும் பொழுதன்றோ துன்ப மதிகரித்தழுகின்றான். அங்ஙன மழும்போது ஒவ்வோர்கால் என் அண்ணாவோ! என் ஐயாவோ! என் அம்மாவோ! என் இராசாவோ! என் கண்ணேயோ! அடேபாபி! என்னை விட்டுப் போயினையோ! இனி நான் என் செய்வேன்! என்று வாயில் வந்தன வந்தன வாய்சோர்ந்து சொல்லித் துக்காதிக்கியத்தால் நன்மொழிகளும் தீமொழிகளும் நிகழப் பெற்றிருக்குங் காலத்து இவையெல்லாம் கேட்கப் பெற்றவர்களாலே குற்றமாக ஒருபோதும் கொள்ளப்பட்டில வென்பது பிரத்தியக்ஷம். அதுபோல, தான் வழிபடுந் தெய்வத்தைப் பரவிய செய்யுட்களை உணர்ந் திருந்தானேனும், அப்பாடல்களைக் கொண்டு தெய்வத்தை வழிபடும்போது கண்ணீர் வார்ந்து மெய்மயிர் சிலிர்க்கின்றான். இக்காலத்து "நெஞ்சின் மிக்கதுவாய் சோர்ந்து தான் வேட்ட பொருளினிடத்துக் குறிப்பின்றியுஞ் சொன்னிகழும்" என்று திருக்கோவை யுரையாசிரியர் உரைத்திருக்கின்றா ராதலின், சிவத்திடைச் செறிந்து கோத்தலாஞ் சிவாநுபவத் திருக்கோவைக்குத் தோற்றுவாயாந் துணையானே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலே குறிப்போடு ஈசன் நாயகனெனக் கூறி, அத்திருவாசக முடிவுத் திருப்பதிகமாகிய "அநுபவ வழியறியாமை"யைக் குறிக்கும் அச்சோப் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினாராகி; பின்னர் மாயாநீக்கத்து விளங்கும் ஏகான்மவாதிகளுடைய பிரமமாகிய சிவப்பிரமத்தைத் தாண்டி, அதற்கு மேலே பராசத்தியோடு கூடிய சிவாத்துவிதிகளுடைய பாசுபத யோகஸ்தான நிஷ்கள பிரமத்தைத்தாண்டி அதற்கு மேலாய் அகம் புறமென்னாது யாண்டும் வியாபித்த பரப்பிரம சிவானந்தசிவம் அகப்பொருளின் நாயகிபாவத்தில் நிகழப் பரமசுகானந்த வெள்ளத்துப் படிந்து அநுபவமுற்று "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டு"ப் பித்தேறினவராய்த் தேடலுந் திகைப்பும் வாடலும் நிகழாத நற்பெரு நிலையுற்ற அம்மாணிக்கவாசக சுவாமிகள் அச்சிவத்தைத் தந்திருவுள்ளத்து நிகழ்ந்தபடி 'தில்லையன்னாய்', 'சிற்றம்பல மனையாள்', 'புலியூரன்னபாவை', 'மயிலே' என்பனவாதியாகத் துதித்தருளினார்.

(சு) ஐம்புலன்களுள்ளே ஒவ்வோர் புலனும் தனித்தனி நிகழ்வது ஒவ்வோர்விஷயத்திலேயாக, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணேயுள" எனவும், "புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்டதூ நலத்தைக்கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றமர்ந்திருந்தார் காதலினால்" எனவும் போந்தவாறு ஐம்புலன்களும் ஒருங்கு நிகழப்பெறுவது சிற்றின்பப் பொருளிலே நாயகியிடத்தே யாமாறுபோல், ஆராதபேரன்பினாலும், "கண்ணினீடு பார்வைகொண்டு காணும்" அன்பினீடிப்பினாலும், "ஆதிச்சுடர்ச் சோதியையன்பினகத்துளாக்கிப் போதித்த நோக்குற்றொழியாது" கூடுதலாலும், "ஆர்வமுன்பெருக ஆராவன்பினிற்கண்டு கொண்டே" நிற்றலாலும், "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்களுன்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமேயாக, விந்துவார் சடையானாடு மானந்த வெல்லையி றனிப்பெருங்கூத்தின், வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து" எனவும், "அடிசார்ந்தவர்க்கு முடியாவின்ப - நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ - மூலமு நடுவுமுடிவு மிகந்து - கால மூன்றையுங் கடந்த கடவு - ளுளக்கணுக்கல்லாதூன் கணுக்கொளித்துத் - துளக்கற நிமிர்ந்தசோதித் தனிச்சுட - ரெறுப்புத் தொளையி னிருசெவிக் கெட்டா- துறுப்பினின்றெழுதரு முள்ளத்தோசை - வைத்தநாவின் வழிமறுத்தகத்தே - தித்தித்தூறுந் தெய்வத்தேற-ருண்டத்தொளையிற் பண்டை வழியன்றி - யறிவினாறு நறியநாற்ற - மேனையதன்மையு மெய்தாத வற்றையுந் - தானேயாகி நின்றதற்பர" எனவும், "அதிரும் புலன்கரிக ளாயுமனத் திண்டேர் - கதியொன்றிய குணமக்காலாட் - சதுரங்கம் - பூட்டிநாப் போலிருக்கப் புக்கடிநிற் கும்புதுமை-காட்டினு னம்பலவன் காண்" எனவும் போந்தவாறு, "உணர்வு நேர்பெறவருஞ் சிவபோக"முற ஐம்புலன்களும் ஒருங்கு ஓரிடத்தில் நிகழப்பெறுவது பேரின்பப் பொருளாகிய சிவபரம் பொருளிலேயா மாதலின், அசுத்தத்திரிபுடியுள்ளே ஞேயப்பொருளாய்ப் போக்கியப் பொருள்களு ளெல்லாஞ் சிறந்தது ஸ்தூஅங்கனை (நாயகி) யாமெனப் பௌஷ்கராதிகளினாற்பெறப்படுதலினால், ஸ்தூலாருந்ததி நியாயங்கொண்டு சுத்தத் திரிபுடியுள்ளே ஞேயப் பொருளாகிய சிவபரம் பொருள் நாயகியாக வைத்துத் துதிக்கப்பட்டதாம் என்றோர்க.

(எ) சிவபெருமானை நாயகியாகக் கொள்ளின் அவர்க்குச் சிறப்பின்மையும் சிறுமையும் கீழ்மையும் வந்து பொருந்துவனவாம் எனவும், அதனாற் சிவபெருமானை நாயகபாவத்தில் வைத்துச் சொல்வதன்றி நாயகி முறையிற் பொருள் கொண்டது குற்றமெனவும் பகர்தலுமடாது. நாம் இலக்கண நூல்களானும், அவற்றது உரைகளானும், தலைவி தலைவனிலும் தாழ்த்தப்படாமையை விருபிப்பாம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் களவியலிலே "ஒத்தகிழவனுங் கிழத்தியுங் காண்ப" என்று போந்த சூத்திரத்துக்குப் "பிறப்புமுதலியன பத்

தும் ஒத்த தலைவனுந் தலைவியும் எதிர்ப்படுப'' என உரை செய்தார் நச்சினார்க்கினியர். இதனால் தலைவி தாழ்த்தப்படாமை உணர்க.

ஆலவாய் அழனிறக்கடவுளாகிய சுந்தரேசர் “அன்பினைந்திணை'' என்பதை முதலாகவுடைய தலைவிக்குந் தலைவற்கும் ஒப்புமை யுணர்த்துவார் பொருளிலக்கண நூலிலே இரண்டாஞ் சூத்திரத்திலே “தானேயவளே'' என்று திருவாய் மலர்ந்தருளினர். இதற்குப் பொய்யடிமையில்லாப் புலவர்களுள் ஒருவராகிய நக்கீரனார் “தானே அவள் அவளே தான்'' என்பது என் சொல்லியவாறோ வெனில், “தான் (நாயகன்) அவள் (நாயகி) என்னும் வேற்றுமையிலர்'' என்று பொருள்கூறி இதனோடமையாது, அவர் “ஆண்பாலுக்களுளிவனோடொத்தாரு மில்லை மிக்காருமில்லை, குறைவுபட்டாரல்லது; எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் குணத்தானும் உருவினாலும் திருவினாலும் பொருவிலன்றானே யென்பது, இவளும் அன்னளெனவே இருவரும் பொருவிறந்தா ரென்பதனைப் பயக்கும்'' என்றும் விரித்து விளக்கினர். இங்ஙனம் கூறினமையால் நாயகனிலும் நாயகி தாழ்த்தப்படா ளென்பது பெறப்பட்டது.

திருவாரூர் வைத்தியநாத நாவலரும் இலக்கண விளக்க வாயிலாக முன்னர்க்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தைப் பெயர்த்து “ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப'' என்று சூத்திரித்து நாயகிக்கும் நாயகனுக்கும் பேதமில்லாமையை விளக்கினர்.

பரிமேலழகியார் களவாவது பிணி மூப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனும் குணனும் அன்பும்முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவு மன்றிப் பால்வகையாற் றாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது'' எனக் களவிலக்கணங் கூறியவழித் தலைவிக்கும் தலைவற்கும் பேதமில்லாமையையும் விளக்கினர்.

மேலே போந்த தொல்காப்பிய முதலிய அதிபலப் பிரமாணங்களால் நாயகியும் நாயகனும் ஒத்தார் என்பது பெறப்படுதலானும், சித்தியார் “சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னிற் சிவனருட் சித்திவனருளைச் சேருஞ் சித்து'' என்றற்றொடக்கத்த திருச்செய்யுளினாலும், நாயகியாகிய சிவற்கு உயர்வும் நாயகனாகிய சீவற்கு இழிவுங் காணப்படுதலானும், “பிறப்பே குடிமை'' என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியர் நாயகனிலும் நாயகிக்கே மேலே போந்த ஒத்தபிறப்பு முதலிய பத்து மெய்ப்பாடும் உரியனவாம் என உயர்வு காட்டியதனாலும் நாயகனிலும் நாயகி தாழ்த்தப்படாமை செவ்விதினறியப்படும்.

இன்னும் இறையனா ரகப்பொருளில் “கொடுமையில்லைக் கிழவிமேன'' புகழுங் கொடுமையுங் கிழவிமேன'' என்றிங்ஙனம் போந்த சூத்திரங்களால்

நாயகி ஓர்கால் தக்காளெனப்படுதலும் ஓர்கால் தகாள் எனப்படுதலு மின்றி எக்காலத்தும் ஒருதன்மையளே யாவள், நாயகன் ஓர்கால் தக்கானெனப்படு தலும் ஓர்கால் தகான் எனப்படுதலும் உடையன் என்பது பொருளாகப்பெறப் படுதலால், சிவப்பொருளாம் நாயகி ஓர்காலும் வேறுபடாது ஒரே நிலைமை யினளாம் என்பதூஉம், ஆன்மாவாகிய நாயகன் அன்னனல்ல னென்பதூஉம் பெறப்பட்டு நாயகனிலும் நாயகிக்கே சிறப்புக் காட்டப்பட்டவாறும் உணர்க.

நாயகனுக்குப் பெருமை கொடுக்கவேண்டிப் "பெருமையுமுரனு மாடூஉ மேன" எனவும் நாயகிக்கு இழிவு கொடுக்கவேண்டி "அச்சமுநாணு மடனு முந் துறுத்த-நிச்சமும் பெண்பாற் குரியவென்ப" எனவும் தோல்காப்பியர் சூத்திரித்தாராலோ வெனின் "இச்சூத்திர மிரண்டும் நாடக வழக்கின்றிப் பெரும்பான்மை உலகியல் வழக்கே கூறலில் இக்கந்தருவம் இக்களவிற்குச் சிறப்பின்ரும்" என நச்சினர்க்கினியர் உரைத்த விசேஷ உரையினுல் இவ் விரு சூத்திரமும் களவொழுக்கம் என்னும் பெயர்பெற்று வீடுபேற்றின் பய த்ததாய் களவியலுற்ற திருக்கோவையார்க்கு ஏலாவாம் என்க. அதுவுமன்றி ஒத்த கிழவனும் கிழத்தியுமாம் என்று கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தோ டும் மாறுபடும் எனவும் உணர்க.

(எ) திருக்கோவையா ருண்மை இயற்றிய ஞானசாரியர் பெறுவான்நாய கனும் பேறு நாயகியும், இன்ப சுகம் நாயகியும் இன்ப சுகத்தைப் பெறுவான் நாயகனும், இரசமும் நாவும்போல விருத்தலான் என்று திருவாய்மலர்ந்தருளி னர். சர்க்கரையின் இரசத்தைக் கொள்வது நாவேயாமாறு போலச் சிவபரம் பொருளின் பரமசுகத்தைக் கொள்பவன் ஆன்மா என்றும் வரைந்த ஞானசி ரியர் கருத்து உண்மையாமென்பது பின்னர்ப்போதருஞ்செய்யுட்களால் உண ரற்பாற்ரும்.

## துகளறுபோதம்

(பரமானந்தபோகம்)

நாவா ரிரதமது நாவருந்த லல்லாதிங்
காவா ரிரத மறியுமோ—வோவாப்
பரமசுக முண்டாற் பலிப்பதே யன்றிப்
பரமசுகங் கொள்ளாப் பயன்.

## தத்துவப்பிரகாசம்.

(ஆன்மலாபம்.)

சர்க்கரை தேன்பால் கண்டு தான்கலந் தருந்து மாபோன்
முற்றிய விரத மாக முழுவிர தத்தை நீங்காப்
பொற்பது பேரலுந் தானுய்ப் போந்தவ தரித்த போதே
சிற்பர னன்ம லாப மாமது திருந்தக் காணே.

மேலே போந்த திருச்செய்யுள்களால் பேறு சிவம்என்பதும், பெறுவான் ஆன்மா என்பதும் அறியக்கிடத்தலாற் பெரியோர் பரமானந்த போக நிலையை ஆன்மலாபமெனக் கூறுவர். இலாபம் என்பது பேறு என்னும் பொருட்டு. இவ்வுண்மை ஒரேபொருள் விளக்கம் கிளர்ந்த மேலே போந்த திருச்செய்யுளிரண்டின் றலையிலே பெரியோராலே தனித்தனி இடப்பட்ட விஷயக்குறிப்பைப் பொருத்திப் பார்க்கும் அறிவுடையோர்க்குப் புலப்படும். துகளறுபோதம் பரமானந்தபோகம் என்று கூற, தத்துவப்பிரகாசம் அதனை ஆன்மலாபம் என்று கூறிற்று. இதனால் இன்ப சுகம் சிவனெனவும் இன்ப சுகத்தைப்பெறுவான் நாயகன் எனவும் பெறப்படும். உலகச்சிற்றின்ப விஷய சுகங்களினும் சிவானந்தம் அளவறுக்கொணாதா மாதலின், இன்பமென்பதீ சுகத்தோடிசைந்து இன்பசுகமென முடிந்து துகளறுபோத நூலார் பரமசுகமென்று கூறிய திருச்செய்யுட் கருத்தையும் காட்டி நின்றது. மேலே போந்தவாற்றாற் பரமானந்த சொரூபமாம் சிவத்தையும் அதனை அனுபவிக்கின்ற ஆன்மாவையும் முறையே புஷ்பத்தின் தேனுக்கும் அதனைப்பருகும் வண்டுக்கும் ஒப்பாகப் பெரியோ ரெடுத்தாளுவர். இதனால் மலர்த்தேன் பரமசிவானந்தத்துக்கும், வண்டு சிவானந்தத்தை அனுபவிக்கும் ஆன்மாவுக்கும் உபமானமாகப் போதருவனவாம்.

ஸ்ரீ காசிவாசி - செந்திநா தையர்.

---

## A CONDOLENCE.

## பரிந்துரை.

---

[இஃது இரட்டணைத்தமிழ்ப் பண்டிதையார் அசலாம்பிகை யம்மையவர்கள் தமதருமைத் தந்தையாரை யிழந்து மனங்கலங்கியவழி அவர்கள்பாற் பரிந்து அவர்கள் ஆற்றியிருத்தல் வேண்டி நிருபமென வரைந்து விடுத்தது.]

(1) இரட்டணைப்பே ரூரின்கண் வேதியர்தங் குலமினிதி
னிலங்கத் தோன்றி
மருட்டுவிழி மடவார்த முரிமையெலாங் கவர்ந்துகொடு
மயங்கிப் பேசுந்
திருட்டுமொழி யாளர்தமை வாதித்துப் புறங்காட்டிச்
செலத்தொ லைத்துத்
தெருட்டுரைகள் பலவெழுதித் திகழசலாம் பிகையம்மைத்
தெரிவை காண்க.

வேறு.

(2) கலைநல மல்கிய காரிகையீ
ரலைகடல் சூழ்தரு மம்புவியின்
மலைகளும் வன்மைய மாநிலமு
நிலைகுலை தந்தழி நீரனவே.

வேறு.

(3) இவ்வுண்மை யறிந்தார்க ளெதுவரினுங் கலங்ககிலா
ரௌவியமில் குணக்குன்றா யரியகுல மரபுவழாச்
செவ்வியசீர் வாய்ந்திருந்த திருப்பெருமா ளையனுந்தை
யவ்வுலகஞ் சென்றமைகேட் டம்மவுள முடைவர்பலர்.

வேறு.

(4) நும்மோய் கைம்மை நோன்புகொள
லெம்மாண் பிற்கண் டிருப்பிர்கொலோ
வம்மா வதனை யாய்வுழியுள்
விம்மா நிற்றல் விளம்பறியேன்.

வேறு.

(5) என்றாலும் பண்டிதையீ ரித்துயர மிவ்வுலகி
னென்றானும் வரற்பாற்றென் றின்பவுளங் கவன்றுமிகக்
குன்றாம லமைந்திருத்தல் கோளென்று நாடோறு
நன்றாகு மாறறிந்து நடப்பிரென நம்புவலே.

வேறு.

(6) இன்பமே வடிவாக் கொண்ட வெம்பெரு மான்றா னீண்டைத்
துன்பமே யெவர்க்குங் காட்டித் தொல்லைநல் வழியி லுய்த்து
வன்புகள் பலவுஞ் செய்து வாய்மையைத் தெரித்துப் பின்னர்
நன்பெரு ஞான வீடு நல்குவன் மெய்ம்மை கண்டீர்.

வேறு.

(7) இனியி வுண்மை யெய்த்தநீ
ரினிய வுள்ள மேங்கவிர்
நனிந னூல்க ளோடுபு
மனியி ருந்து வாழ்விரே.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

போவர்சமாதானம்:—இதுகாறும் தென்னுபிரிக்காவில் நடந்து கொண்டிருந்த பெரும்போர் நின்றுவிட்டமை கேட்டுக் களிப்படையாதார் யாரே? இருதிறத்தாருக்கும் அநுகூலமாகச் சமாதான வுடன்பாடு ஏற்பட்டுளதாம். நம்மன்னவர் எட்வர்ட் வள்ளலார் முடிசூட்டுக் கொண்டாட்டக் காலத்தில் அவராளுகைக் குட்பட்ட நாடுகளி லெங்கேனும் போர் நிகழ்தல் நேரிதன்றுமெனவறிந்து போவர்த்தலைவர்கள் சமாதானஞ்செய்து கொண்டமை பாராட்டற் பாலதே.

***

முடிசூட்டுக் கொண்டாட்டம் நின்று பட்டமை:—நமது இந்திய சக்கிரவர்த்தியாரும் ஆங்கிலராஜருமாகிய எட்வர்ட் பூபதிக்கு முடிசூட்டுவதென்று ஏற்பட்ட ஜூன் மாதம் 26-ஆந் தேதியன்று அம் முடிசூட்டு வைபவம் நிகழாது போயிற்று. அவ்வாறு போனமைக்குக் காரணமென்? அரசரது அசௌக்கிய நிலையே. நம்முடைய வேந்தர் சிகாமணிக்கு வயிற்றின் மேற்புறத்திலொரு கட்டிகண்டு மிகுந்தவருத்தம் விளைத்தமைபற்றி வைத்தியம் வல்ல பண்டிதர்கள் அதை யறுத்துச் சிகிச்சை செய்தார்கள். இவ்வாறு குறிப்பிட்ட தினத்திலே நம்மரசர்க்கு நோய் வரும்படியாகநேர்ந்ததே யென்று உலகம் முழுவதும் வருந்துவதாயிற்று. முடிசூட்டுக் கொண்டாட்டத்திற்கெனச் சென்ற இந்திய கனவான்கள் யாவரும் அந்த வைபவங்காணாது திரும்பிவரவேண்டியதாயிற்று.

***

சக்கிரவர்த்தியாரவர்களின் தேகசௌக்கியம்:—மேற் கூறியவாறு மருத்துவர்கள் சிகிச்சை செய்ததன்மேற் கோமானுக்குத் தேகம் சுகநிலையை யடைந்துகொண்டு வருகிறதெனக் கேட்டுக் கழிபேருவகை பூக்கின்றோம். நம்மவர்கள் அரசரது சுகப்பேற்றின் பொருட்டுத் தேவாலயங்களிற் பூசைகள் நடத்திக் கடவுளை வேண்டிக் கொண்டனர். இவ்வாறு நம்மவர்கள் வேண்டிக்கொண்ட வேண்டுகோட்குக் கடவுளு மிரங்கிக் கருணைகாட்டினமை பற்றி மீட்டும் பெருமானுக்கு உளமுவந்து பூசை செய்யற்பாலெ மாயினேம். அரசர் தேகசௌக்கிய மடைந்தமையின் முடிசூட்டுக் கொண்டாட்டமும் கூடிய சீக்கிரத்தில் நிகழும்போலும். அது நிகழ்ந்து நம்மவர் மனங்களைக்களிப்பிப்பதாக.

***

திருப்பாதிரிப் புலியூரில் தமிழ்ப்பிரசங்கம்.—இம்மதி அப்பர் சுவாமிகள் திரு நக்ஷத்திரமாகிய சதயத்தன்றிரவு 8-மணிக்குமேல், திருப்பாதிரிப் புலியூரில் தோன்றாத் துணைவர் சந்நிதியின் முன்னும் திருவருள் விலாச நிலயத்தின் முன்னும், நடராஜப் பெருமான் சந்நிதியின் முன்னும் நின்று சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் நாடகத் தமிழாசிரியருமாகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ. திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தினின்றும் இயற்பகை நாயனரது சரிதத்தை யெடுத்துப் பலமேற்கோள்கள் காட்டிப் பிரசங்கித்தனர். அதைக்கேட்டு யாவரும் களிப்படைந்தனர்.

காற்றுக் கப்பல்:—டாக்டர் பார்டன் என்பவர் வானத்திற் காற்றிலே பறக்கவல்ல போர்க்கப்பலொன்று புனைகின்றனராம். அது வேண்டிய விடத்தில் நிற்கத் தக்கவாறு சூத்திரங்க ளமைக்கப்பட்டுளதாம். ஒரு மணிக்கு 20 மைல் தூரஞ் செல்லுமாம். வானத்திலேயே 48-மணி நேரந்தான் நிற்க முடியுமாம். அது மூன்று பிரிவினதாக வகுக்கப்பட்டுளதாம். நடுப்பிரிவு யந்திர வியக்கத்திற்கென அமைக்கப்பட்டுளதாம். என்னே மனிதனதாற்றல்!

ஜனத்தொகை:—இதுவரைக்கும் வெளிப்பட்டுள ஜனகணிதக் கணக்கின்படி பார்த்தால், பெல்ஜியத்தில் ஒரு சதுரடிக்கு 593 மக்கள் வீதம் 6,744, 532 ஜனங்களும், இங்கிலாந்தில் ஒரு சதுரடிக்கு 557 மக்கள் வீதம் 32, 532, 242 ஜனங்களும், உலாந்தில் ஒரு சதுரடிக்கு 403 மக்கள்வீதம் 5, 103, 924, ஜனங்களும், ஜப்பானில் ஒரு சதுரடிக்கு 296, மக்கள் வீதம் 43, 760,754, ஜனங்களும், ஜர்மனியில் ஒரு சதுரடிக்கு 269 மக்கள் வீதம் 56, 345, 014, ஜனங்களும், அஸ்திரியாவில் ஒரு சதுரடிக்கு 225 மக்கள் வீதம் 26, 107, 304, ஜனங்களும், ஸ்விட்ஜர்லாந்தில் ஒரு சதுரடிக்கு 207 மக்கள் வீதம் 3,212,551 ஜனங்களும், பிரான்சில் ஒரு சதுரடிக்கு 189 மக்கள் வீதம் 38,317,975 ஜனங்களுமாயிருப்ப, நம் இந்தியாவிலோ ஒரு சதுரடிக்கு 188 மக்கள் வீதம் குறைந்திருந்தபோதிலும், மொத்தத்தில் 294,266,701 ஜனங்களிருக்கின்றனர்.

நியாயஸ்தல வழக்கு:—நம் இந்தியாவில் நியாயஸ்தலக் கணக்குக்களை யெடுத்துப் பார்த்தால் சிவில் வழக்குக்கள் மட்டில் ஒரு வருஷத்திற்கு 2,000,000 என்பதும், அவற்றிற்குச் செலவு 19,500,000 பவுன் என்பதும் ஏற்படுகின்றன. அவற்றிற் பத்து ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட தொகைக்காகச் செய்த வழக்குக்கள் 400,000. ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தொகைக்காகச் செய்த வழக்குக்கள் 900,000. இவ்வாறு வழக்குக்கள் அதிகரித்ததற்குக் காரணம் ஆங்கிலதேசத்து நாகரிகத்தை மேற்கொண்டமையே யென்று கூறுதல் அறிவின்மையின் பாற்படும். ஆங்கில நியாயாதிபதிகள் நியாயஞ் செலுத்துவதில் தக்கார் என்ற உணர்ச்சியே இந்தியர்களைப் பெருவழக்குத் தொடுக்கும்படி தூண்டிற்று என்பது தக்க காரணமன்றோ?

ஆண் பெண் மூளை வேறுபாடு:—மூளையின் பகுதிகள் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் தக்கவாறு வெவ்வேறு விதங்களில் அமைந்திருக்கின்றன. முதற்கண் ஆடவர் மூளை மகளிர்மூளை யினும் மிகக்கனத்தது. இவ்வாறு மூளைகளின் பகுதிகள் வேறுப்பட்டிருக்கும் இயல்பினை உற்று நோக்கின் மகளிர்க்குக் கலை நலஞ் சிறக்கச் சிறக்க அவரது அழகு குறைந்துவிடும் என்று ஒரு வைத்தியர் அஞ்சுகின்றனர்.

சந்திர சேகர சிம்மசாமந்தர்:—இப்பெயருடையாரோர் வானசாஸ்திரி ஒரிஸாவைச் சார்ந்ததோர் குறுநிலமன்னர்க்கு உறவினராம். இவர் கர்னாடக வழியில் வானசாஸ்திரம் பயின்றவர். இக்காலத்திற் கண்டு பிடிக்கப்பட்டுள அநேக அருமையான வானசாஸ்திர உண்மைகளை இற்றை நாட் கருவிகளின் உதவியில்லாமலே தம்முடைய அவயவங்களின் உதவி ஒன்றையே கொண்டு கண்டு பிடித்திருக்கின்றனர். அவர் கண்டு பிடித்த வழிகளும் யாவரும் மெய்ச் சத்தகுந்தனவா யிருக்கின்றன. நம்முடைய இந்து பிராசீன சித்தாந்தங்களிற் காணப்படாத பல அருமையான உண்மைகள் இவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவர் பல ஆங்கில வான நூற்புலவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்புலவர் பெருமான் நீடூழி வாழ்வாராக.

சுகுண சுந்தரம்:—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இருபத்து நான்கு பக்கங்கள் கொண்டது மூன்று ரூபா வருஷச் சந்தாக் கொண்டது துறையூர்த் தமிழ்ப்பண்டிதர் விசுவநாதபிள்ளை யவர்களாற் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. சென்ற மேமர்தம் வெளிப்பட்ட இதன் முதற் சஞ்சிகையைக் கண்ணுற்றோம். அதன்கண் சுகுணசுந்தர மெனப் பெயர் கொண்டபத்திரிகையினைப்பற்றியும் இரவலா தீர்த்தபுரி சுபாஷிணி கதாப்பிரசங்கம் இரதோற்சவம் என்னும் விஷயங்களைப் பற்றியும் எழுதப்பட்டிருத்தலே யன்றி 1902-ஆம் வருஷத்துப் பிரவேசபரீட்சைத் தமிழ்ப்பாட புத்தகத்திற் சில வினாக்களெழுப்பி அவற்றிற்கு விடையும் காட்டப்பட்டுள. எனவே இது மாணாக்கர் பயன் கருதி எற்பட்டதோர் பத்திரிகை போலும். இதனைத் தமிழபிமானிகளாவார் ஆதரிப்பாரென்று நம்புகின்றோம்.

ஸ்ரீரங்கக்களவு:—திருக்கோயில் என வைணவர்களாற் சிறப்பித்துச் சொல்லப்படும் திருவரங்கமா நகரத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமாள் கோயிலிற் சின்னாண் முன்னர்த் திருடர்கள் சிலர் புகுந்து கொள்ளையிட்டன ரென்பது கேட்டு மனம் புழுங்குகின்றோம். முதற்கண் யாரோ பட்டாணித் துருக்கர்களா யிருக்கவேண்டும் அத்திருடர்களென ஐயுற்றனராம். பின்னர்க் கோயிலினுள் துப்பறிந்து கொண்டவன் யாரோ உதவி செய்திருக்கவேண்டு மென்றும் அக்கோயி லுத்தியோகஸ்தர்களிற் சில்லோரும் அதிற் சேர்ந்திருக்கலாமென்றும் ஐயுறுகின்றார்கள். எஃதெப்படிப் போனாலும் போகட்டு மென்றாலும் இப்போழ்தத்து ஸ்ரீ ரங்கநாதர்க்குப் பூஜை முதலியவற்றுளொன்றுமின்றிக் கதவு தாழிடப்பட்டுளது.

திராவிட வர்த்தமானி:—நமக்கு மாற்றுப்பத்திரிகையாக வரும் வாரப் பத்திரிகைகள் யாவற்றினுள்ளும் இப்பத்திரிகை மிகவுஞ் செவ்வையாக நடைபெற்றுக் கௌரவத்தோடும் கம்பீரத்தோடும் உலாவிப் பலவருமையான விஷயங்களைத் தெரிக்கின்றது. மேலும் ஐயுற்பாலவான சிற்சில விடங்களில் இப்பத்திரிகை துணிந்து தனது அபிப்பிராயத்தை வெளியிடுமாறு வியக்கத் தக்கதே. இதன் கண்ணே அடிக்கடி சில சித்திரப்படங்கள் கண் கவர்வனப்பினவாய் வெளியாகின்றன. இப்பத்திரிகையைத் தமிழ் பேசும் மக்களுட் பலர் ஆதரிப்பாரென் றெண்ணுகின்றனம்.

மாப்பிள்ளை விலைப்பணம்:—முன் காலத்திலிருந்த மகளிர் விலைப் பண மொருபுறமிருப்ப இக்காலத்திலோ மாப்பிள்ளை விலைப்பண மென்றொன்று தலைப்பட்டிருக்கின்றது. அதாவது பெண்ணைக் கொடுப்பவர் மாப்பிள்ளைக்கு ஆயிரக்கணக்காகப் பணத்தையுங் கொடுத்து மருகனை விலைக்குப் பெறும் பணமாம். இவ்வழக்கம் தஞ்சாவூர் ஜில்லா வெங்கும் பரவியிருந்தது; இப்பொழுது தமிழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. இத்தகைய மாப்பிள்ளை விலைப்பணத்தை அம்மாப்பிள்ளையின் தாய் தந்தையர் தத்தஞ் செலவுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதும் வழக்கம். அப்படிச்செலவு செய்து கொள்வது எவ்வாறு நேரிதோ? அறியோம். சின்னாண் முன்னர் ஓரிடத்தில் நிகழ்ந்த விவாகத்தில் மாப்பிள்ளை விலைப்பணம் ரூபா 6000. என்றேற்பட்டது. விவாகத்துக்கு முதல்நாள் பணமுங்கொடுக்கப்பட்டது. அப்பணத்தைப் பெற்ற மாப்பிள்ளையின் தகப்பனார் தமக்கு வேண்டியவாறு செலவு செய்யத் தலைப்பட்டனர். அஃதுணர்ந்து மாப்பிள்ளை மறுநாட் காலை மணவினைப் பொழுதில் வரமாட்டேனென்று விட்டான். இது மிகவும் பரிதபிக்கத் தக்கதன்றோ? இதனை யறிந்து நம்மவர் தக்கவாறு நடப்பாராக.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY **THOMPSON & CO.,**

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.



No. 302—Rs. 2-0-0.



No. 306—Rs. 3-0-0.




Rs. 3-0-0.

ஒவ்வொரு டைரியிலும் நமது சக்கரவர்த்தியினுடைய உருவப் படம் மிக நேர்த்தியாய் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

தாம்ஸன் அண்டு கம்பெனியார்

# மினெர்வா டைரிகள்:

நடந்துவரும் 1902வூ த்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய டைரிகள் விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன:

| | | |
|---|---|---|
| நெ. 1. | ஆறுவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3 அங்குல அகலமும் $4\frac{1}{4}$ அங்குலநீளமும் உள்ளது. | 0 4 0 |
| 2. | ஷை ஷை மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான பாக்கெட் டைரி | 0 6 0 |
| 3. | அதிக உபயோகமுள்ளதும் அவசியமான விஷயங்களடங்கியதும் 8 - அங்குல நீளமும் 5 - அங்குல அகலமும் உள்ளது. | 0 12 0 |
| 3. | ஷை பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது | 1 " 0 0 |
| 4. | அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10 - அங்குல நீளமும் 8 - அங்குல அகலமுமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. | 1 2 0 |
| 5. | பூல்ஸ்காப் சடித அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. | 1 4 0 |

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஹிந்துஸ்தானி, மலையாளம், கன்னடம் இந்த ஆறுவித பாஷைகளில் தேதிகள் அச்சிட்டிருப்பதோடும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் பஞ்சாங்கம், 12-மாதத்து ராசி சக்கரம், அமிர்தயோகம் யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணிதல், ஆருடத்திற்கு, ஆர்த்தைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமை யறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், கரிநாள், காது குத்தும் நாள், கிருகப்பிரவேசம், கோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தம்பல், தேதிமழை, நிஷேக முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், கௌரி பஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரை வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டுவோர் அடியிற்கண்டவிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

தாம்ஸன் கம்பெனி,
33, பிராட்வே, சென்னை

PRINTED AT THE "MINERVA" PRESS, BROADWAY, MADRAS